தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகார அமைச்சு

# வருடாந்த அறிக்கை
# 2016

தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சு

## தொலைநோக்கு

துாரநோக்கு எங்களது எதிர்கால தொழில்படை தயார்

## நோக்கம்

அபிவிருத்தி, அமுல்படுத்தல், மேம்படுத்தல் மற்றும் பயனுள்ள கொள்கைகளை சதிப்படுத்துவதோடு புதுமையான உத்திகளைக் கையாண்டு எமது நாட்டின் மனிதவளத்தினை அபிவிருத்தி செய்தலாகும்.

## பெறுமதிகள்

- குழுக்கலாசாரம்
- வாடிக்கையாளர் முக்கியத்துவம்
- படைப்பாற்றல்
- பாகுபாடு காட்டாமை

## நிறுவனத்தின் பின்புலம்

நிறுவனம் : இலங்கை தேசிய மனித வள அபிவிருத்தி சபை

அமைச்சு : தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சு

முகவரி : 354/2, 7வது மாடி, நிபுணதா பியச, எல்விடிகல மாவத்தை,
நாரஹேன்பிட்டிய, கொழும்பு 05

மின்னஞ்சல் முகவரி : chairmannhrdc@yahoo.com

இணையத்தள முகவரி : www.nhrdc.gov.lk

தொலைபேசி : 0112595680

பக்ஸ் : 0112595680

வங்கியாளர்கள் : இலங்கை வங்கி
மக்கள் வங்கி

# தலைவரின் செய்தி

1997ம் ஆண்டு 18ம் இலக்க இலங்கை மனித வள அபிவிருத்தி சபை சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இந்தச் சபை குறுகிய காலத்தினுள் பல்வேறுபட்ட அமைச்சுகளின் கீழ் செயற்பட்ட போதிலும், 2016ம் ஆண்டிலிருந்து தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சின் கீழ் செயற்படுகின்றது.

2016ம் ஆண்டு இந்த நிறுவனம் நிறுவப்பட்ட சட்ட நோக்கத்திற்கு அமைவாக ஊழியர் ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்படுவதுடன், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக் கருத்திட்டங்களும் ஒழுங்குசெய்யப்படுகின்றது. அத்துடன், நிர்ணயிக்கப்பட்ட தொலைநோக்கினைப் பூர்த்தி செய்வதற்கு அடையாளம் காணப்பட்ட செயற்பணியைப் பூரணப்படுத்துவதற்கு எதிர்கால ஆராய்ச்சிகளுக்காக தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்திற்கு இணக்கமாக வடிவமைக்கப்பட்ட கருத்திட்டங்களுக்காக பொதுத் திறைசேரியினால் மூலதனச் செலவுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 15.5 மில்லியன் வரையறைக்குள் 2016ம் ஆண்டுக்கான திட்டம் தயாரிக்கப்பட்டது.

இந்தக் கருத்திட்ட தேர்வின் போது, பிரிவு 14.1 இல் குறிப்பிட்ட பிரதான பரப்புகளை பூர்த்தி செய்வதற்கு அடையாளம் காணப்பட்டவைகள் ஆகும். அவை

(அ) தொழில்வாய்ப்பு, பயிற்சி மற்றும் கல்வி
(ஆ) விஞ்ஞானம் மற்றம் தொழில்நுட்பத்தின் பிரயோகம்
(இ) சிறந்த வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தல்.
(ஈ) பின்தங்கிய குழுக்களில் உள்ள நபர்களுக்கு சமூகப் பாதுகாப்பினை வடிவமைத்தல்
(உ) பொருளாதார சீரமைப்பு மூலம் உரிமைகளைப் பாதுகாத்தல் அல்லது தொடர்புடைய மனித வளத்தை ஒருங்கிணைத்தல்

“எதிர்காலத்திற்கு தயாரான தொழிற்படை” எனும் தொலைநோக்கைக் கொண்டிருக்கும் இலங்கை தேசிய மனித வள அபிவிருத்தி சபை, வினைத்திறன் மற்றும் செயற்திறன் மிக்க சேவைகளை வழங்கும் நோக்கத்துடன், இலங்கை மனித வளத்தை அபிவிருத்தி செய்வதற்கு கீழ்வரும் கருத்திட்டங்களையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் 2016இல் அமுல்செய்தது.

**2016ம் ஆண்டில் அமுல்செய்யப்பட்ட கருத்திட்டங்கள்**

இலங்கை தேசிய மனித வள அபிவிருத்திச் சபை “ எதிர்காலத்திற்கு தயாராக தொழிற்படை” எனும் தொலைநோக்கை தன்னகத்தே கொண்டு, வினைத்திறன் மற்றும் செயற்திறனான சேவையை வழங்குவதற்கு இலங்கையின் மனித வளவை அபிவிருத்தி செய்வதற்கு பின்வரும் கருத்திட்டங்களையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் 2016ம் ஆண்டினுள் அமுல்படுத்தியது.

**முகாமைத்துவ தகைமை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் 2016**

தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சின் கீழ் செயற்படும் இலங்கை தேசிய மனித வள அபிவிருத்திச் சபை, நாட்டின் மனித வள அபிவிருத்திக்கு அவசியமான கொள்கைகளை வகுப்பதற்கும் அவற்றினை ஆளுமை செய்வதற்கும் பொறுப்பாக உள்ள ஒரு வளர்ந்து வரும் நிறுவனமாகும்.

இலங்கை தேசிய மனித வள அபிவிருத்திச் சபை " எதிர்காலத்திற்கு தயாராக தொழிற்படை" எனும் தொலைநோக்கத்தின் கீழ் பொதுத்துறையில் உள்ள முகாமைத்துவ ஊழியர்களுக்கு மலேசியாவின் புத்ர பல்கலைக்கழகத்துடன் இணைந்து இரு முகாமைத்துவ தகைமை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை வெற்றிகரமாக நடாத்தியது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் பிரதான நோக்கமாக பொதுத்துறையில் உள்ள முகாமைத்துவ அலுவலர்களின் தமைமைகளை பலப்படுத்துவது அமைந்திருந்தது. இந்த நோக்கத்தை அடைவதற்காக, இந்த நிகழ்ச்சித்திட்டம் உள்ளூர் அமர்வு மற்றும் வெளிநாட்டு அமர்வு எனும் இரு தொடர்களாக நடாத்தப்பட்டதுடன், ஒவ்வொரு அமர்விலும் பல்வேறுபட்ட நிறுவனங்களில் உள்ள முகாமைத்துவ ஊழியர்களுக்கு அவசியமான வேறுபட்ட இயலுமைகள் இலக்காகக் கொள்ளப்பட்டது.

**இலங்கை மனித வள மூலதன மாநாடு – 2016**

இலங்கை மனித மூலதன மாநாடு 2016 தேசிய மனித வள அபிவிருத்தி சபை மற்றும் இலங்கை மனித வள தொழில்நெறிஞர்கள் சங்கத்தினால் 11 - 12 ஓகஸ்ட் 2016ம் திகதி வரை ஒழுங்குசெய்யப்பட்டது. இந்த மாநாடு பல்வேறுபட்ட நலன்விரும்பிகளினால் வளமூட்டப்பட்டதுடன், சிலோன் ஊழியர்கள் கூட்டமைப்பு, சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனம், ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் உலக வங்கி என்பவற்றின் உதவி வழங்கப்பட்டதுடன், இலங்கையை போட்டித் தன்மையுள்ள நாடாக உதவுதல் மற்றும் மனித வள சவால்களை எதிர்கொள்வதற்குமான தீர்வுகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

இந்த மாநாடு இலங்கையில் வளர்ச்சியடைந்து வரும் பிரதான நான்கு துறைகளான சுற்றுலா மற்றும் விருந்தோம்பல், சேவைகள், கட்டிட நிர்மாணம் வெளிநாட்டு, மற்றும் வெளிநாட்டு தொழில்வாய்ப்பு என்பவற்றை இலக்காகக் கொண்டிருந்தது.

**சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் என்ற தலைப்பில் பிராந்தியங்களில் உள்ள தொழில்வாய்ப்பு சந்தர்ப்பங்கள் தொடர்பாக விழிப்புணர்வை உருவாக்கல்.**

இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கம், அரசதுறை மற்றும் தனியார்துறை பங்களிப்புடன் மேற்குறிப்பிட்ட பங்குதாரர்களுடன் சுற்றுலாத்துறைக்கு திறமையானவர்களை உள்ளீர்க்கப்படுவதை உறுதிப்படுத்தவதற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில் உள்ள

பாடசாலைகளை கல்வியை முடித்த மாணவர்களை இதன் மூலம் இணைத்துக்கொள்ளல் மேற்கொள்ளப்பட்டது.

இந்த விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டத்தின் பிரதான நோக்கம், இந்த கைத்தொழிற்துறையின் நீண்ட கால ஓட்டத்தில் ஏற்படும் திறனுள்ளவர்களின் பற்றாக்குறையினை தீர்ப்பதுடன் தொழில் வாய்ப்பற்றவர்களின் எண்ணிக்கையை குறைப்பதற்கு உரிய பயிற்சி நெறிகளைப் பயிலுவதற்கு பாடசாலையைக் கல்விளை முடித்த மாணவர்களை ஊக்குவிப்பதாகும்.

## KPMG உடன் பொதுத்துறை முகாமைத்துவ ஊழியர்களின் தகைமையை அபிவிருத்தி செய்தல் நிகழ்ச்சித்திட்டம்

தேசிய மனித வள அபிவிருத்தி சபையுடன் KPMG பட்டயக் கணக்காளர்கள் இணைந்து பொதுத் தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சின் கீழ் இருக்கும் அனைத்து அரச உடமை தொழில்முயற்சிகளை ஆளுமைப்படுத்தும் சபை அங்கத்தவர்களுக்கு செயலமர்வு நடாத்தப்பட்டது.

### கொள்கை உருவாக்கம்

கைத்தொழில் நிறுவனங்கள் மற்றும் தொழிற்சந்தையினர் எத்தகைய திறன்களை எதிர்பார்க்கின்றனர் அதற்கு மூன்றாம் நிலைக்கல்வி அல்லது தொழிற்கல்வி நிறுவனங்கள் எவ்வாறான திறன்களை வெளியீடு செய்கின்றன. இவை இரண்டிற்குமிடையிலான இடைவெளிகளை அடையாளப்படுத்தி அதற்கான கொள்கை உருவாக்க பரிந்துரைகளை மேற்கொள்வதற்காக கற்றல் குழுக்கள் நான்கு உருவாக்கப்பட்டன.

### விருந்தோம்பல் துறையில் உள்ளவர்களுக்கான இணைந்த தொழில்சார் நிதி மற்றும் முகாமைத்துவக் கணக்கியல் பாடநெறி இலங்கை சான்றழிக்கப்பட்ட முகாமைத்துவக் கணக்காளர்கள் (CMA) மற்றும் இலங்கை சுற்றுலா மற்றும் ஹொட்டல் முகாமைத்துவ நிறுவனம் (SLITHM) நிறுவனங்களினால் நடாத்தப்பட்டது.

தேசிய மனித வள அபிவிருத்தி சபை, விருந்தோம்பல் துறைக்கான நிதி, கணக்கியல் மற்றும் முகாமைத்துவக் கணக்கியல் துறைகளில் தொழில்சார் கல்வி நிகழ்ச்சித்திட்டத்தின் நன்மைகளை அடையாளம் கண்டுகொண்டதனால், “ சான்றழிக்கப்பட்ட விருந்தோம்பல் நிதி மற்றும் முகாமைத்துவ கணக்கியல் (CHFMA)” நிகழ்ச்சித்திட்ட்தை இலங்கை சான்றழிக்கப்பட்ட முகாமைத்துவக் கணக்காளர்கள் (CMA) மற்றும் இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனம் (SLITHM) என்பவற்றுடன் இணைந்து இணைந்த சான்றழிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்துவதற்கு வசதியளித்தது.

இந்த ஆரம்ப முயற்சி விருந்தோம்பல் துறையில் காணப்படும் மிகக் குறைந்தளவான தொழில்சார் நிதி மற்றும் முகாமைத்துவ கணக்கியல் நிகழ்ச்சித்திட்டத்தின் தற்போதைய தேவையை அடையாளம் கண்டு எடுக்கப்பட்டது. இந்த தகைமையைப் பெற்றுக்கொள்பவர்கள் விருந்தோம்பல் கைத்தொழில் துறையில் காணப்படும் தொழில்

வாய்ப்புக்களை தகைமையுடைய, நிதி மற்றும் முகாமைத்துவ கணக்கியல் தொழில்நெறிஞர்களாகப் பெற்றுக்கொள்வர்.

**இலங்கையில் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களை ஊக்குவித்தல் மற்றும் பலப்படுத்துவதற்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்**

தற்பொழுது சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் தொடாபான உரிய வகையிலான தரவுகளோ அல்லது குறிப்புகளோ பொதுவாகக் கிடைக்கப்பெறவில்லை. அத்துடன் கிராமங்களில் உரிய பங்குதாரர்களுடனும் சேவை வழங்குனர்களுடனும் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி உரிமையாளர்கள் உரியவகையிலான வலையமைப்புகளைக் கொண்டிருக்கவில்லை. அதேவேளை, இலங்கையில் உள்ள சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் நிதி முகாமைத்துவம், கிடைக்கப் பெறும் சேவைகளை அணுகுதல், ஏனைய நிறுவனங்களுடன் வலையமைப்புகளை உருவாக்குதல், சந்தைப்படுத்தல் மற்றும் அவர்களின் பண்டங்களை விற்பனை செய்தல், மற்றும் தொழில்நுட்ப மேம்படுத்தலுடனான திறன் அபிவிருத்தி என்பவற்றில் பல்வேறுபட்ட சவால்களை எதிர்கொள்கின்றனர்.

இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கம், கைத்தொழில் (தயாரிப்பு : செங்கல், மரவேலை, வாசனைத் திரவியங்கள், ஆடை தயாரிப்பு, கட்ட நிர்மாணிப்பு), சேவைகள் (சலூன், கராஜ், தொழில்நுட்பவியலாளர், இரும்புப் பட்டறை, மொத்த மற்றும் சில்லறை விற்பனை, ஈடு பிடித்தல், வெல்டிங், சாத்திரம் பார்த்தல், உணவு விடுதிகள், வீடு மற்றும் கார் விற்பனை, வாடகைக் கார்) மற்றும் விவசாயம் (கால்நடை விலங்குகள், பெருந்தொட்டப் பயிர்கள், தோட்ட வேளாண்மை) உள்ளடங்களாக பல்வேறுபட்ட வியாபார முயற்சிகளில் பிரதேச மற்றும் மாவட்ட செயலக மட்டத்தில் ஈடுபட்டுள்ள சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்கள் / சுயதொழில் முயற்சிகளர்களை வலுவூட்டுவதாகும்.

**பொதுத்துறையில் முகாமைத்துவ தகைமைகளைக் கட்டியெழுப்புவதற்கான மனித வள உபாயமார்க்கத்தை அபிவிருத்தி செய்தல் மற்றும் நிறைவேற்றுவதற்கு திட்டமிடுதல்**

அரச மற்றும் கூட்டுத்தாபனங்களில் ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுளர்வுகளின் போது பொருத்தமான நபர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு சரியான உபாயமார்க்கம் அபிவிருத்தி செய்யப்படவில்லை. இதற்கு தீர்வாக எங்கள் சபை ஊழியர்களிடமிருந்து வினைத்திறன், செயற்திறன் மற்றும் தரமான சேவையைப் பெற்றுக்கொள்வதற்காக கூட்டிணைந்த நிபுணர்களுடன் இணைந்து பொதுவாக ஏற்றுக்கொண்ட பொதுத்துறைக்கான தகைமைச் சட்டகத்தை தயாரித்துள்ளது.

அத்துடன், ‘‘பொது மக்களுக்கு வினைத்திறன் மற்றும் செயற்திறனான சேவைகளை வழங்குவதற்கு பொதுத்துறை ஊழியர்களின் அறிவு மற்றும் திறனை மேம்படுத்தவதற்காக மனித வளம் அல்லதவற்றுக்கான மனித வளம’’, ‘‘உங்களையும் உங்கள் குழுவையும்

ஊக்குவித்தல்'', ''மேம்படுத்தப்பட்ட பொதுத்துறை வழங்களில் மனித வளத்தின் வகிபாகம்'', வாழ்க்கையின் வழியில் தொழில்நிபுணத்துவம் எனும் தலைப்புகளில் தொடர் விரிவுரைகள் நடாத்தப்பட்டன.

**அறிவாற்றல் முகாமைத்துவம்**

2016 ஆம் ஆண்டில் அறிவு முகாமைத்துவம் தொடர்பான அறிமுகம் மற்றும் உள்ளக முகாமைத்துவதினை பலப்படுத்துவதற்கான முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. ஆங்கில அறிவினை பலப்படுத்துவது மிக முக்கிய தேவையாக உள்ளது. அறிவாற்றலுடன் கூடிய படைப்பாற்றல் பயிற்சி மற்றும் தொடர்பாடல், அறிவாற்றலை பெறுமதியான சொத்தாக மையப்படுத்திய பொருளாதாரம் போன்றவற்றில் கவனம் செலுத்தியது.

**''ரக்கியா அருண'' தொழில் தகைமை நிகழ்ச்சித்திட்டம்**

இலங்கை தேசிய மனித வள அபிவிருந்திச் சபை, பாடசாலையை விட்டு நீங்கிய மாணவர்களுக்கு தனியார்துறையில் உள்ள தொழில்வாய்ப்புகளுக்கு அவர்களின் தகைமைகளை உருவாக்கிக் கொள்வதற்காகவும் தனியார்துறைகளில் உள்ள தொழில்வாய்ப்புகளுக்கு அவர்களை வழிநடத்துவதற்காகவும் அவர்கள் தொழில் தகைமைகளைப் பெற்றுக்கொள்வதற்காக ''ரக்கியா அருண'' எனும் தொழில் ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்தியது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கம் பொதுத்துறையில் உள்ள உட்கட்மைப்பு வசதிகளைப் பயன்படுத்தி தொழில் பயிற்சி வாய்ப்புகள் மற்றும் தொழில்வாய்ப்புகள் தொடர்பாக தொழில் வழங்குனர்களுக்கு இடையில் உள்ள தகவல் பரிமாற்ற இடைவெளியைக் குறைப்பதற்காக திட்டங்களை கட்டியெழுப்புதலும் பாடசாலையை விட்டு நீங்கிய மாணவர்களுக்கான தொழில்பயிற்சித் தேவைகளை பூர்த்திசெய்வற்கான தலையீடுகளை மேற்கொள்வதுமாகும். இதற்கமைவாக, 2016ம் ஆண்டு தேசிய வர்த்தக சம்மேளனம், தொழில் பயிற்சி நிறுவனங்கள், வலயக் கல்வி காரியாலயங்கள், மாவட்டச் செயலகங்கள், பிரதேசச் செயலகங்கள் என்பவற்றுடன் இணைந்து களுத்துறை, இரத்தினபுரி, கண்டி, கொழும்பு போன்ற மாவட்டங்களில் 4 நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தியது.

**ISO 9001:2015சான்றிதழைப் பெற்றுக்கொள்வதன் ஊடாக இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்தி சபையினுள் வினைத்திறனையும் தரத்தையும் மேம்படுத்தல்**

எதிர்காலத்திற்கு தகைமையுடைய தொழிற்படை எனும் தொலைநோக்குடன் இலங்கை தேசிய மனித வள அபிவிருத்தி சபை இலங்கையில் மனித வளத்தை அபிவிருத்தி செய்வதற்காக ISO 9001:2015 தரக் கொள்கைக்கு அமைவாக செயற்படுவதன் ஊடாக வினைத்திறனுடைய சேவையை வழங்குகின்றது.

இலங்கை நியம நிறுவனத்தினால் நுண்ணாய்வு மேற்கொள்ளப்பட்தற்கு அமைவாக. நிறுவனத்தின் நடவடிக்கைகள் ISO 9001:2015 ற்கு இணக்கமாக செயற்படுத்தப்படுகின்றது என விதப்புரை செய்யப்பட்டது. அதனால் நாங்கள் இலங்கை தரநிர்ணய கட்டளைகள் நிறுவனத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய ISO 9001:2015 நியம முகாமைத்துவ முறைமைக்கு அமைவாக தரமான சேவையை தொடர்ந்தும் வழங்குவதற்கு முடிவெடுத்தள்ளோம்.

தினேஸ் வீரக்கொடி
தலைவர்

## பொருளடக்கம்

1. நிறுவனத்தின் பின்புலம் மற்றும் விடயப்பரப்பு ........................................ 1

2. இலங்கை தேசிய மனித வள அபிவிருத்திச் சபையின் ஒழுங்கமைப்பு கட்டமைப்பு ........................................ 4

3. இலங்கை தேசிய மனித வள அபிவிருத்திச் சபை – ஒழுங்கமைப்பு கட்டமைப்பு வரைபடம் ........................................ 7

4. இலங்கை தேசிய மனித வள அபிவிருத்திச் சபையில் பணிபுரியும் ஊழியர்களின் பட்டியல் மற்றும் அவர்களின் பதவி ........................................ 8

5. கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் ........................................ 12

5.1 முகாமைத்துவ தகைமை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் 2016 (MCDP) ........................................ 12

5.2 இலங்கை மனித மூலதன மாநாடு 2016 ........................................ 17

5.3 சுற்றுலா மற்றும் விருந்தோம்பலை உள்ளடக்கி செயலமர்வொன்றை நடாத்தியதன் ஊடாக பிராந்தியங்களில் உள்ள தொழில்வாய்ப்பு சந்தர்ப்பங்கள் தொடர்பாக விழிப்புணர்வை உருவாக்கல். ........................................ 18

5.4 இலங்கையில் அடையாளம் காணப்பட்ட பங்குதாரர்களுடன் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி துறையின் வியாபார இயலளவை ஊக்குவித்தல் மற்றும் பலப்படுத்தல் ........................................ 21

5.5 KPMG உடன் பொதுத்துறை முகாமைத்துவ ஊழியர்களின் தகைமையை அபிவிருத்தி செய்தல் நிகழ்ச்சித்திட்டம் ........................................ 23

5.6 விருந்தோம்பல் துறையில் உள்ளவர்களுக்கான இணைந்த தொழில்சார் நிதி மற்றும் முகாமைத்துவக் கணக்கியல் பாடநெறி இலங்கை சான்றழிக்கப்பட்ட முகாமைத்துவக் கணக்காளர்கள் (CMA) மற்றும் இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனம் (SLITHM) நிறுவனங்களினால் நடாத்தப்பட்டது. ........................................ 24

5.7 பொதுத்துறையில் முகாமைத்துவ தகைமைகளைக் கட்டியெழுப்புவதற்கான மனித வள உபாயமார்க்கத்தை அபிவிருத்தி செய்தல் மற்றும் நிறைவேற்றுவதற்கு திட்டமிடுதல ........................................ 25

5.7.1 தகைமைச் சட்டகம் ........................................ 25

5.7.2 விரிவுரைத் தொடர்கள் - 2016 ........................................ 25

5.8 ‘‘ரக்கியா அருண’’ தொழில் தகைமை நிகழ்ச்சித்திட்டம் - 2016 ........................................ 30

5.9 செய்திப் பத்திரிகை – மனித வள தொலைநோக்கு ........................................ 31

5.10 இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்தி சபையினுள் வினைத்திறனையும் தரத்தையும் மேம்படுத்தல் . 32

5.11 2016ம் ஆண்டினுள் இலங்கை தேசிய மனித வள அபிவிருத்தி சபையின் வெளியீடுகள் ........................................ 33

6.இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்திச் சபை ........................................ 34

7. 2016 டிசம்பர் 31ம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான நிதிச் செயலாற்றுகை கூற்று ........................................ 36

8. 2016 டிசம்பர் 31ம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான தேறிய சொத்துக்கள் ∴ உரிமைப் பங்கு மாற்றக்கூற்று ........................................ 37

9. காசுப் பாச்சல் கூற்று ........................................ 38

10. குறிப்புகள் ........................................ 40

11. குறிப்புகள், முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் சுருக்கம், விளக்கக் குறிப்புகள் ........................................ 48

12. கணக்காய்வு அறிக்கை மற்றும் பதில ........................................ 52

# 1. நிறுவனத்தின் பின்புலம் மற்றும் விடயப்பரப்பு

இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்தி சபை, இளைஞர் விவகார மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சின் கீழ் முக்கிய பணிகளை ஆற்றுவதற்காக 1997ம் ஆண்டு 18ம் இலக்க இலங்கை தேசிய மனித வள அபிவிருத்தி சபைச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட நிறுவனமாகும் அந்த நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ் மனிதவள அபிவிருத்தி தொடர்பான அனைத்து நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை வழங்குதல், மனிதவள அபிவிருத்திக்காக கொள்கைகளை உருவாக்குதல், மேம்படுத்துதல், செயற்படுத்துதற்கு உதவிகளை வழங்குதல் போன்ற முக்கிய பணிகளின் பொறுப்பினை வகிக்கின்றது. அதன் பிரதான நோக்கமாக இருப்பது உரிய அமைச்சருக்கும், அரசுக்கும் மனிதவள அபிவிருத்தி தொடர்பான விதப்புரைகளை வழங்கும் உயர் மட்ட நிறுவனமாக செயற்படுதல் ஆகும்.

## 1.1 நிறுவன அறிமுகம்

தேசிய மட்டத்திலான ஆலோசனை சபையாக 1987ம் ஆண்டு ஜூன் மாதம் 05ம் திகதி இலங்கை தேசிய மனிதவள சபை ஆரம்பமானது, இளைஞர் விவகார அமைச்சின் ஓர் அலகாகவாகும். அதன் பின்னர் 1997ம் ஆண்டு 18ம் இலக்க இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்தி சபைச் சட்டத்தின் ஊடாக சுயாதீனமாக தொழில்முயற்சியாண்மை சபையாக விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சின் கீழ் நிறுவப்பட்டது. அன்றிலிருந்து குறுகிய காலத்தினுள், அதாவது 2000ம் ஆண்டு இந் நிறுவனம் கைத்தொழில் கல்வி மற்றும் தொழில் அமைச்சின் கீழ் சாட்டப்பட்டதுடன், 2001ம் ஆண்டு இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்தி சபை கல்வி மற்றும் காலாச்சார அமைச்சின் கீழ் சாட்டப்பட்டது. அதன் பின்னர் மீண்டும் அரசு மாற்றமடைந்ததும் இந்த நிறுவனம் திறன் அபிவிருத்தி, தொழில் மற்றும் கைத்தொழில் பயிற்சி அமைச்சின் நிர்வாகத்தின் கீழ் வந்தது. இவ்வாறு குறுகிய காலத்தினுள் பல்வேறுபட்ட அமைச்சின் கீழ் செயற்பட்டு வந்த இந்த நிறுவனம் தற்போது கொள்கைத் திட்டமிடல், பொருளாதார நடவடிக்கை, சிறுவர், தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சின் கீழ் செயற்படுகின்றது.

## 1.2 தொலைநோக்கு

துாரநோக்கு எங்களது எதிர்கால தொழில்படை தயார்

## 1.3 நோக்கம்

அபிவிருத்தி, அமுல்படுத்தல், மேம்படுத்தல் மற்றும் பயனுள்ள கொள்கைகளை சந்தைப்படுத்துவதோடு புதுமையான உத்திகளை கையாண்டு எமது நாட்டின் மனிதவளத்தினை அபிவிருத்தி செய்தலாகும்.

## 1.4 நோக்கம்

இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்தி சபையின் நோக்கமான அரசுக்கு மனிதவளத்தை அபிவிருத்தி செய்வது தொடர்பான ஆலோசனை மற்றும் வழிகாட்டலை வழங்குவதற்கான நிறுவனச் சட்டகத்தை உருவாக்குதல். மனிதவள அபிவிருத்தி கொள்கை செயற்பாட்டுத் திட்டம், கொள்கை மீளாய்வு மற்றும் மனிதவள பிரிவின் வளர்ச்சி போன்ற பிரிவுகள் தொடர்பாக இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்தி சபை பொறுப்பினை வகிக்கும். சபையின் சட்டத்திறகு அமைவாக சபையின் பணிகள் கீழ்வருமாறு அமைகின்றது.

1. (அ) தொழில்வாய்ப்பு, பயிற்சி மற்றும் கல்வி
   (ஆ) விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தல்
   (இ) வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தல்
   (ஈ) பாதிக்கப்பட்ட குடும்பக் குழுக்களுக்கு சமூகப் பாதுகாப்பைத் திட்டமிடுதல் மற்றும்
   (உ) பொருளாதார மீள்கட்டமைப்பு மூலம் உரிமைகளைப் பொற்றுக்கொடுத்தல் தொடர்பாக அல்லது மனித வளத் தொகுதியை நியாயப்படுத்துதல் மற்றும் ஒருங்கிணைத்தல் உட்பட தேசிய மனிதவள கொள்கையின் அனைத்துப் பிரிவுகள் தொடர்பாகவும் அமைச்சருக்கு ஆலோசனை வழங்குதல்.

2. தேசிய கொள்கைக்கு அமைவாக மனிதவள அபிவிருத்தி திட்டம் மற்றும் நிகழ்ச்சித்திட்டம் என்பவற்றை அரசுக்கு சமர்ப்பிப்பதற்காக விடயத்திற்கு பொறுப்பான அமைச்சருக்கு விதப்புரையை வழங்குதல்.

3. தேசிய மனிதவள அபிவிருத்திக் கொள்கைகள் மற்றும் செயற்படுத்தப்படும் திட்டம் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை காலத்திற்கு காலம் மீளாய்வு செய்தல் மற்றும் பரீசீலித்துப்பார்த்தல் மற்றும் தேவையாயின், அக்கொள்கைகளுக்கு திட்டங்களுக்கு மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு செய்யவேண்டிய மாற்றங்களை அமைச்சருக்கு விதப்புரை செய்தல்.
4. அரசினால் அனுமதியளிக்கப்பட்ட மனிதவள அபிவிருத்தி திட்டம் மற்றும் நிகழ்ச்சித்திட்டம் செயற்படுவதை ஆராய்ந்து பார்த்தல்.

5. இந்த சட்டத்தின் உபஅட்டவணையில் குறிப்பிடப்பட்ட யாதேனும் வியம் தொடர்பாக யாதேனும் கருத்திட்டங்களை செயற்படுத்தல். அவ்வாறு இருந்த போதிலும் கருத்திட்டம் வேறுயாதேனும் அமைச்சருக்கு சாட்டப்பட்ட யாதேனும் விடயம் தொடர்பாக இருக்குமாயின், அதனை செயற்படுத்தல் என்பது அந்த அமைச்சரின் சம்மதத்துடன் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

6. தேசிய நோக்கத்திற்கு அமைவாக மனிதவளத்தை அபிவிருத்தி செய்வதற்கு அவசியம் எனக் கருதும் நன்மைகள் அல்லது பின்னர் பலன்தரக்கூடியவை என கருதும் அனைத்தையும் செயற்படுத்தல்.

## 1.5 சபைக்கு உள்ள அதிகாரங்கள்

1997ம் ஆண்டு 18ம் இலக்க இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்திச் சபைச் சட்டத்தின் 16 (2)(1)ம் உபபந்தியின் கீழ் சபைக்குரிய அதிகாரங்கள் இவையாகும்.

(அ) சபையின் பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமான ஆய்வுகள், விசாரணைகள், கற்கைகள் மற்றும் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல்.

(ஆ) மனிதவள அபிவிருத்திக்குரிய விடயங்கள் தொடர்பாக நிபுணர்களின், தொழில்சார்ந்தவர்களின் அல்லது மக்களின் கருத்தினை அறிந்து கொள்வதற்கு வெளிப்படையாக அல்லது தனிப்பட்ட ரீதியில் விடங்களை கேட்டறிதல்.

(இ) சபையினால் நிறைவேற்றப்படும் பணிகளுக்கு சமமான பணிகளை இலங்கைக்கு வெளியில் மேற்கொள்ளும் சர்வதேச நிறுவனங்கள் மற்றும் வேறு நிறுவனங்கள் என்பவற்றுடன் தொடர்புகளைப் பேணுதல்.

(ஈ) இந்த சட்டத்தின் கீழ் சபையின் பணிகளை மேற்கொள்வதற்கு அவசியமான அனைத்து ஒப்பந்தங்கள் மற்றும் உடன்படிக்கைகளுக்கு வருதல் மற்றும் அவற்றினை நிறைவேற்றுதல்.

(உ) இலங்கை அல்லது வெளிநாடுகளில் உள்ள நிறுவனங்கள் அல்லது தனிப்பட்ட நபர்களின் ஊடாக மனிதவள அபிவிருத்தி ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும் நடவடிக்கைகளில் ஈடுபடுதல்.

(ஊ) மனிதவள அபிவிருத்தி மற்றும் அதற்குரிய விடயங்கள் தொடர்பான தகவல் தரவு வங்கியொன்றினை நிறுவி அதனைப் பேணுதல்.

(எ) ஏதேனும் வங்கி அல்லது வங்கிகளில் நடைமுறை, சேமிப்பு அல்லது வைப்பு கணக்குகளை உருவாக்கி அவற்றைப் பேணுதல்.

(ஏ) அசையும் மற்றும் அசையா இருவகை நன்கொடை மற்றும் நிவாரணங்களை ஏற்றுக்கொள்ளுதல் மற்றும் பெற்றுக்கொள்ளுதல்.

(ஐ) மனித வள அபிவிருத்தியில் பல்வேறுபட்ட பிரிவுகளில் திறன் நிபுணத்துவ ஒதுக்கொன்றினை அபிவிருத்தி செய்யும் நோக்கத்தினைக் கொண்டு சபை அலுவலர்களின் திறமையை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

(ஒ) சபையின் பணிகளை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு அவசியமான குழு நிபுணத்துவக் குழு மற்றும் ஆலோசனைச் சபை என்பவற்றை நிறுவுதல்.

(ஓ) அமைச்சுகளில், அரச திணைக்களங்களில், அரச கூட்டுத்தாபனங்களில், சட்டபூர்வ சபைகளில், மாகாண சபைகளில், உள்ளூராட்சி நிறுவனங்களில் மற்றும் தனியார் நிறுவனங்களில் இருந்து பெற்றுக்கொள்ளும் தரவுகள் உட்பட சபையினால் அவசியம் எனக் கருதப்படும் தகவல்களை கோருதல் மற்றும் அவற்றினை பெற்றுக்கொள்ளுதல்.

(ஔ) சபையின் பணி அதிகாரங்கள் மற்றும் பணியினை நிறைவேற்றுதல் என்பவற்றை செயற்படுத்துதல் மற்றும் செயற்படுத்துவதற்கு அவசியம் என எண்ணும் நன்மையானது அல்லது பின்னர் பலன்தரக்கூடியது எனும் அனைத்தையும் செயற்படுத்தல்.

## 2. இலங்கை தேசிய மனித வள அபிவிருத்திச் சபையின் ஒழுங்கமைப்பு கட்டமைப்பு

தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சு அமைச்சின் கீழ் செயற்படும் இந்த சபை 1997ம் ஆண்டு 18ம் இலக்க இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்திச் சபைச் சட்டத்தின் கீழ் குறிப்பிடப்படும் ஏற்பாடுகளுக்கு அமைவாக நிறுவப்பட்ட தலைவர் மற்றும் அங்கத்தவர்கள் என்பவர்கள் உள்ளடங்களாக 20 நபர்களைக் கொண்டு அமைந்துள்ளது. இதில் 15 பேர் உத்தியோகபூர்வ அதிகாரத்துடனும் உரிய நிறுவனங்களில் இருந்து 5 பேராகவும் நியமிக்கப்படுவர். இதைவிட உரிய துறையில் முன்னனுபவம் மற்றும் திறமை என்வற்றை கருத்தில் கொண்டு 5பேர் நியமிக்கப்படுவதுடன், இதில் இருவர் தனியார் நிறுவனங்களைச் சேர்ந்தவராவர். சபை அங்கத்தவர்களில் ஒருவரை நிறைவேற்றுத் தலைவராக பெயரிடுவதற்கு விடயத்திற்கு பொறுப்பான அமைச்சருக்கு அதிகாரம் சாட்டப்பட்டுள்ளது. இவ்வாறு பிரதான நிறைவேற்று அலுவலர் சபையின் தலைவராவார். சுபை 31.12.2016ம் திகதி 19 அங்கத்தவர்களை கொண்டமைந்திருந்தது. 2016ம் ஆண்டு சபையின் பணிப்பாளர் சபை கீழ்வரும் அங்கத்தவர்களைக் கொண்டிருந்தது.

**<u>சட்டத்தின் 3(1)(அ) வில் இருந்து (வ) வரையிலான பந்தியின் கீழ் நியமனங்கள்</u>**

1. தலைவர், இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்தி சபை
2. செயலாளர் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சு
3. செயலாளர் உயர்கல்வி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சு
4. செயலாளர், கல்வி அமைச்சு
5. செயலாளர் விஞ்ஞான , தொழிநுற்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சு
6. செயலாளர், தொழிலாளர் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சு
7. செயலாளர், பொதுநிர்வாகம் மற்றும் பொதுமுகாமைத்துவ அமைச்சு
8. செயலாளர், சுகாதார போஷணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு
9. செயலாளர் கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சு
10. செயலாளர், நீர்ப்பாசனம் மற்றும் விவசாய அமைச்சு
11. தலைவர், மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழு
12. பணிப்பாளர் நாயகம், மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழு
13. தலைவர், தேசிய கல்வி ஆணைக்குழு
14. தலைவர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
15. தலைவர், தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற்பயிற்சி அதிகாரசபை
16. செயலாளர், நிதிஅமைச்சு

**சட்டத்தின் 3(2)(ஜ) பந்தியின் கீழ் நியமனங்கள்**

1. பேராசிரியர். குமென்னா குனரத்ன, பீடாதிபதி, மனித நேயங்கள் மற்றும் சமூக விஞ்ஞான பீடம், இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
2. கலாநிதி. ரங்ஹிக ஹல்வத்துர, முதுநிலை விரிவுரையாளர், மொறட்டுவ பல்கலைக்கழகம்.
3. கலாநிதி. ரனில் அபேசிங் , 178, ஜோர்ஜ் ஆர்.டீசில்வா மாவத்தை, கண்டி.

**2015ம் ஆண்டு இலங்கை தேசிய மனித வள அபிவிருத்திச் சபையின் நிர்வாகக் குழுக் கூட்டம் மற்றும் நடத்தப்பட்ட தினங்கள் மற்றும் பங்குபற்றிய அங்கத்தவர்களின் விபரங்கள்**

| தொடர் இலக்கம் | நிர்வாக சபையின் அங்கத்தவர்களின் பெயர் | 2016.03.02 | 2016.06.29 | 2016.10.28 |
|---|---|---|---|---|
| 01. | தலைவர், இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்தி சபை | √ | √ | √ |
| 02. | செயலாளர் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சு | - | √ | √ |
| 03. | செயலாளர் உயர்கல்வி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சு | - | √ | √ |
| 04. | செயலாளர், கல்வி அமைச்சு | - | - | - |
| 05. | செயலாளர் விஞ்ஞான , தொழிநுற்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சு | - | - | - |
| 06. | செயலாளர், தொழிலாளர் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சு | - | √ | √ |
| 07. | செயலாளர், பொதுநிர்வாகம் மற்றும் பொதுமுகாமைத்துவ அமைச்சு | √ | - | √ |
| 08. | செயலாளர், சுகாதார போஷணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு | - | - | √ |
| 09. | செயலாளர் கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சு | - | √ | - |
| 10. | செயலாளர், நீர்ப்பாசனம் மற்றும் விவசாய அமைச்சு | - | - | - |
| 11. | தலைவர், மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழு | - | - | √ |
| 12. | பணிப்பாளர் நாயகம், மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழு | - | √ | - |
| 13. | தலைவர், தேசிய கல்வி ஆணைக்குழு | √ | - | √ |
| 14. | தலைவர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு | √ | - | - |
| 15. | தலைவர், தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற்பயிற்சி அதிகாரசபை | - | - | - |
| 16. | செயலாளர், நிதிஅமைச்சு | √ | - | - |
| 17. | பேராசிரியர். குமென்னா குனரத்ன | - | - | √ |
| 18. | கலாநிதி. ரங்ஹிக ஹல்வத்துர | √ | √ | √ |
| 19· | கலாநிதி. ரனில் அபேசிங் | √ | - | √ |
| | | **07** | **07** | **11** |

**வருடத்தினுள் சபையின் அங்கத்தவர்களிடையில் ஏற்பட்ட மாற்றங்கள்**

1. கல்வி அமைச்சின் தலைவரா பணிபுரிந்த திரு டபில்யூ.எம்.பந்துசேன அவர்கள் ஓய்வுபெற்றதைத் தொடர்ந்து திரு சுனில் ஹெட்டியாராச்சி செயலாளராக நியமிக்கப்பட்டதுடன் 22.09.2016ம் திகதியுடைய தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகார அமைச்சின் செயலாளரின் கடிதத்தின் ஊடாக சபையின் நிர்வாக அங்கத்தவாராக நியமிக்கப்பட்டார்.

2. பொது நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ விவகாரங்கள் தொடர்பான அமைச்சின் செயலாளராக பணிபுரிந்த திரு ஜே.தடல்லகே அவர்கள் ஓய்வுபெற்றதைத் தொடர்ந்து திரு ஜே.ஜே.ரத்னசிறி செயலாளராக நியமிக்கப்பட்டதுடன், 22.09.2016ம் திகதியுடைய தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகார அமைச்சின் செயலாளரின் கடிதத்தின் ஊடாக சபையின் நிர்வாக அங்கத்தவாராக நியமிக்கப்பட்டார்.

3. தேசிய பயிலுனர் மற்றும் தொழில்நுட்ப பயிற்சி அதிகாரசபையின் தலைவராக பணியாற்றிய ஜே.வை.பீரிஸ் அவர்களுக்கு பதிலாக திரு ஏ.யு.சீ அதுக்கோரளை அமைச்சின் ஊடாக நியமிக்கப்பட்டதுடன், 22.09.2016ம் திகதியுடைய தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகார அமைச்சின் செயலாளரின் கடிதத்தின் ஊடாக சபையின் நிர்வாக அங்கத்தவாராக நியமிக்கப்பட்டார்.

4. 1997ம் ஆண்டு 18ம் இலக்க இலங்கை தேசிய மனித வள அபிவிருத்தி சபைச் சட்டத்தின் பந்தியின் கீழ் பேராசிரியர் திரு சந்திரா அம்புல்தெனிய 31.10.2016ம் திகதி தொடக்கம் நிர்வாக சபையின் அங்கத்தவராக நியதிக்கப்பட்டார்.

5. நிதி அமைச்சின் பிரதிநிதியாக பணிபுரிந்த திருமதி என் கொடகந்த வேறு அமைச்சுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார்.

## 3. இலங்கை தேசிய மனித வள அபிவிருத்திச் சபை – ஒழுங்கமைப்பு கட்டமைப்பு வரைபடம்



## 4. இலங்கை தேசிய மனித வள அபிவிருத்திச் சபையில் பணிபுரியும் ஊழியர்களின் பட்டியல் மற்றும் அவர்களின் பதவி

| பதவிப் பெயர் | அனுமதி வழங்கப்பட்ட பதவியணி | 31.12.2016 திகதியன்று சேவையில் இருந்த ஊழியர்களின் எண்ணிக்கை | 31.12.2016 திகதியன்று வெற்றிடம் | பெயர் |
|---|---|---|---|---|
| தலைவர் | 01 | 01 | - | திரு தினேஸ் வீரக்கொடி |
| பணிப்பாளர் | 01 | 01 | - | திரு கே ஏ லலிததீர |
| உதவிப் பணிப்பாளர் | 03 | 02 | - | திரு எஸ். தணிகசீலன்<br>திருமதி ஜே.ஏ.சி.ஜி.ஜயசிங்க |
| சபைத் தலைவர் /சட்ட அலுவலர் | 01 | 01 | - | செல்வி ஜி.ஜி.கயுனி உப்பலா |
| ஆய்வு உத்தியோகத்தர் | 04 | 04 | - | திருமதி ஆர்.எம்.ஏ.யு.கே. இரத்னாயக்க<br>திருமதி ஏ.எச்.டி.சி. பெரேரா<br>திரு டி செந்தில்நாதன்<br>செல்வி. என்.டி.எதிரிசிங்க |
| நிர்வாக உத்தியோகத்தர் | 01 | 01 | - | செல்வி. கே.வீ.எஸ்.எரங்கா |
| மொழிபெயர்ப்பாளர் | 01 | - | 01 | - |
| அபிவிருத்தி அலுவலர் | 04 | 04 | - | திருமதி பீ.ஈ.எஸ். சேனாரத்ன த சில்வா<br>திரு ஆர்.டி.சி.எஸ் ராஜபக்ச<br>திரு.கே.பி.ஜி.பெரேரா<br>செல்வி.சீ.குணசிங்க |
| தலைவரின் தனிப்பட்ட உதவியாளர் | 01 | | 01 | |
| முகாமைத்துவ உதவியாளர் | 08 | 07 | 01 | திரு.சி.ஆர்.மத்தகே<br>செல்வி.எம்.ஜி.என்.தில்ஹாரி<br>திரு.டபில்யூ.எம்.லக்சித ரஜித்<br>செல்வி கே சி முத்துமால<br>செல்வி ஜி.ஜி.எம்.சத்தாமங்கள<br>செல்வி. ஆஷா சுரேணி எதிரிசிங்க<br>செல்வி.ஆர்.எல்.ஜ.சஞ்சீவனி |
| சாரதி | 04 | 03 | 01 | திரு.ஜி.எம். பின்னதுாவ<br>திரு.டபில்யூ.டெரன்ஸ் பியல்<br>திரு டி.எச.டபல்யூ. அசங்க லக்மால் |
| அலுவலக உதவியாளர் | 04 | 03 | 01 | திரு என்.ஜி.நதுன் மதுரங்க<br>திரு.டபில்யூ.ஆர்.ஏ பிரின்ஸ் கிரான்வில்<br>செல்வி ஏ நயனா பிரியதர்சனி |
| **மொத்த எண்ணிக்கை** | **33** | **27** | **06** | |

**புதிய நியமனங்கள்**

| பெயர் | பதவி | நியமிக்கப்பட்ட திகதி |
|---|---|---|
| செல்வி கே.வீ.எஸ்.எரங்கா | நிர்வாக உத்தியோகத்தர் | 2016/08/15 |
| செல்வி.ஆர்.எல்.ஜ.சஞ்சீவனி | முகாமைத்துவ உதவியாளர் | 2016/10/17 |
| திரு டி.எச.டபல்யூ. அசங்க லக்மால் | சாரதி | 2016/08/01 |

**சேவையில் இணைத்துக்கொள்ளல்**

| பெயர் | பதவி | இணைத்துக் கொள்ளப்பட்ட நிறுவனம் | இணைக்கப்பட்ட தினம் |
|---|---|---|---|
| திரு.எச்.யு.காரியவசம் | உதவிப்பாளர் (நிதி) | இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை | 2016/10/16 |

**சேவையில் இருந்து இராஜினாமாச் செய்தல்**

| பெயர் | பதவி | இராஜினாமச் செய்த தினம் |
|---|---|---|
| செல்வி சாமினி காரியவசம் | நிர்வாக அலுவலர் | 2016/01/14 |
| திரு.டபில்யூ.எச்.ஈ.ஜயரத்ன | சாரதி | 2016/05/27 |
| திரு.யு.எஸ்.டி.விதானகே | உதவிப் பணிபாளர் (நிதி) | 2016/10/04 |

**உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயிற்சி**

இலங்கை தேசிய மனித வள அபிவிருத்தி சபை ஊழியர்களின் விடய அறிவினை மேம்படுத்துவதற்காக மீளாய்வு வருடத்தில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சிகள் வழங்கப்பட்டன. கீழே உள்ள அட்டவணையில் 2016ம் ஆண்டு பயிற்சியில் பங்குபற்றிய ஊழியர்களின் விபரங்கள் தரப்பட்டுள்ளது.

**உள்நாட்டு பயிற்சி – தனிப்பட்ட / குழு**

| | **தனிப்பட்ட பயிற்சி** | | | |
|---|---|---|---|---|
| **இல** | **ஊழியரின் பெயர்** | **பதவி** | **பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர்** | **நிறுவனம்** |
| 1 | செல்வி.கே.சி.முத்துமால | முகாமைத்துவ உதவியாளர் | கணனிமயப்படுத்தப்பட்ட கணக்கியல் பயிற்சிநெறி [SME] [Qickbooks, Tally ERP, MYOB] | இலங்கை AAT நிறுவனம் |
| | செல்வி நதீஷா தில்ஹாரி | முகாமைத்துவ உதவியாளர் | | |
| 2 | செல்வி.கே.சி.முத்துமால | முகாமைத்துவ உதவியாளர் | விலைக்கோரல் மதிப்பீட்டக்கான பிரயோக குணாம்சங்கள் | திறன் அபிவிருத்தி நிதியம் லிமிடட் |
| | செல்வி நதீஷா தில்ஹாரி | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | திருமதி.ஜி.பீ.எம்.சத்தமங்கள | முகாமைத்துவ உதவியாளர் | | |
| 3 | திருமதி.ஜி.பீ.எம்.சத்தமங்கள | முகாமைத்துவ உதவியாளர் | Microsoft Exell 2010/2013 மனித வள தொழில் நெறிஞர்களுக்கான பட்டமானி பாடநெறி | பணியாளர் முகாமைத்துவ நிறுவனம் |
| 4 | செல்வி.ஜி.ஜி.கே.உத்பலா | சட்ட அலுவலர் | தொழில் விருத்திக்கான தொழிலாளர் சட்டம் | IPM |
| 5 | திரு.கே.ஏ.லலிதாதீர | பணிப்பாளர் | தொழில் நெறிஞர்களுக்கான ஆங்கிலத்தில் பணியாளர் டிப்ளோமா | NIBM |
| 6 | திரு.டபில்யூ.எம்.எல்.ரன்சித் | முகாமைத்துவ உதவியாளர் | ஆங்கிலப் பேச்சுப் பாடநெறி | ICBT |
| 7 | திருமதி.ஆர்.எம்.யூ.கே.இரத்நாயக்க | ஆராய்ச்சி அலுவலர் | மேற்பார்வை மற்றும் மதிப்பீடுதல் தொடர்பான டிப்ளோமா | தொழில் கற்கைக்கான தேசிய நிறுவனம் |

| | குழுப் பயிற்சி | | | |
|---|---|---|---|---|
| **இல** | **ஊழியரின் பெயர்** | **பதவி** | **பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர்** | **நிறுவனம்** |
| 1 | செல்வி செவ்வந்தி எரங்க<br>திரு.ராஜித மதகே<br>திரு.லக்ஷித ரஞ்சித்<br>செல்வி. நதிஷா தில்ஹாரி<br>திருமதி.எம்.சத்தமங்கள<br>செல்வி. ஆஷா சுரேனி<br>செல்வி கசுனி சாமலிகா<br>செல்வி இனோக்கா சஞ்சீவனி | நிருவாக அலுவலர்<br>முகாமைத்துவ உதவியாளர்<br>முகாமைத்துவ உதவியாளர்<br>முகாமைத்துவ உதவியாளர்<br>முகாமைத்துவ உதவியாளர்<br>முகாமைத்துவ உதவியாளர்<br>முகாமைத்துவ உதவியாளர்<br>முகாமைத்துவ உதவியாளர் | மனித மூலதன அபிவிருத்தி முதுமானிப் பாடநெறி | HNB |
| 2 | திரு.கே.ஏ.லலிதாதீர<br>திருமதி.ஜே.ஏ.சீ.பி.ஜயசிங்க<br>திரு.யு.எஸ்.டி.விதானகே<br>திரு.எஸ்.டீ.சீலன்<br>செல்வி.ஜி.ஜி.கே.உத்பலா<br>திருமதி.ஹன்சானி பெரேரா<br>திரு.டி.செந்தில்நாதன்<br>திருமதி.அமாலி இரத்நாயக்க<br>திருமதி.என்.டி.எதிரிசிங்க<br>திரு.ஆர்.டி.சீ.எஸ்.ராஜபக்ஷ<br>திருமதி. எரந்தி டி சில்வா<br>திருமதி ஜி கசுதானி சத்துரிக்கா<br>திருமதி.ஜி.பி.எம்.சத்தமங்கல | பணிப்பாளர்<br>உதவிப் பணிப்பாளர்<br>உதவிப் பணிப்பாளர்<br>உதவிப் பணிப்பாளர்<br>சட்ட அலுவலர்<br>ஆராய்ச்சி அலுவலர்<br>ஆராய்ச்சி அலுவலர்<br>ஆராய்ச்சி அலுவலர்<br>ஆராய்ச்சி அலுவலர்<br>அபிவிருத்தி அலுவலர்<br>அபிவிருத்தி அலுவலர்<br>அபிவிருத்தி அலுவலர்<br>அபிவிருத்தி அலுவலர்<br>முகாமைத்துவ உதவியாளர் | தொழிற்பாட்டுத் திட்டங்களை அபிவிருத்தி செய்வதற்கான நிகழ்ச்சித்திட்டம் | NHRDC |
| 3 | திரு.எஸ்.தணிகசீலன்<br>செல்வி.கே.வீ.செவ்வந்தி<br>செல்வி.என்.டி.எதிரிசிங்க<br>திரு.டி.செந்தில்நாதன் | உதவிப் பணிப்பாளர்<br>நிருவாக அலுவலர்<br>ஆராய்ச்சி அலுவலர்<br>ஆராய்ச்சி அலுவலர் | அறிக்கை எழுதுதல் தொடாபான பயிற்சி | NHRDC |
| 4 | திரு.எஸ்.தணிகசீலன்<br>திரு.டி.செந்தில்நாதன்<br>திருமதி. எரந்தி டி சில்வா<br>திருமதி.எம்.சத்தமங்கள | உதவிப் பணிப்பாளர்<br>ஆராய்ச்சி அலுவலர்<br>அபிவிருத்தி அலுவலர்<br>முகாமைத்துவ உதவியாளர் | நிதி ஒழுங்குமுறைப்படுதல் மீதான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | NHRDC |

# 5. கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள்

## 5.1 முகாமைத்துவ தகைமை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் 2016 (MCDP)

தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சின் கீழ் தொழிற்படும் இலங்கை தேசிய மனித வள அபிருத்தி சபை நாட்டின் மனித வள அபிவிருத்திக்கான கொள்கைகளை விதப்புரை செய்தல் மற்றும் ஆளுகை செய்தலுக்கு பொறுப்பான வளர்ந்து வரும் நிறுவனமாகும்.

இலங்கை தேசிய மனித வள அபிருத்தி சபையின் தொலைநோக்கான ''எதிர்காலத்திற்கு தயாரான எங்கள் தொழிலாளர்கள்'' என்பதற்கமைய மலோசியாவின் புத்ர பல்கலைக்கழகத்துடன் இணைந்து பொதுத்துறை முகாமைத்துவ ஊழியர்களுக்கான இரு முகாமைத்துவ தகைமை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் 2016 ஏப்பிரல் மற்றும் 2016 ஒக்டோபர் மாதங்களில் முறையே வெற்றிகரமாக நடாத்தப்பட்டது.

இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் பிரதான நோக்கம் அரசதுறை முகாமைத்துவ ஊழியர்களின் தகைமைகளை பலப்படுத்தல் ஆகும். இந்த நோக்கத்தை அடைவதற்காக உள்நாட்டு அமர்வு மற்றும் வெளிநாட்டு அமர்வு என இரு அமர்வுகளாக நிகழ்ச்சித்திட்டம் வடிவமைக்கப்பட்டது. ஒவ்வொரு அமர்வும் வேறுபட்ட நிறுவனங்களைச் சேர்ந்த முகாமைத்துவ மட்ட ஊழியர்களுக்கான பல்வேறுபட்ட தவைமைகளை இலக்காக்கொண்டு வினைத்திறனுடன் வடிவமைக்கப்பட்டது.

**உள்நாட்டு அமர்வு**

| | |
|---|---|
| வள நபர் | திரு.ரனில் சுகததாச |
| இடம் | இலங்கை நிர்வாக அபிவிருத்தி நிறுவனம் |
| விடயப் பரப்புகள் | ➢ கருத்திட்ட முகாமைத்துவம்<br>➢ கருத்திட்ட முகாமைத்துவம் மீதான கணணிப் பிரயோகம் (MS Project software)<br>➢ நேர முகாமைத்துவம்<br>➢ ஆகுசெலவு முகாமைத்துவம்<br>➢ வள முகாமைத்துவம்<br>➢ காட்சிப்படுத்தல் திறன்கள் |

**வெளிநாட்டு அமர்வு**

| | |
|---|---|
| இடம் | புத்ர பல்கலைக்கழகம், மலேசியா |
| விடயப் பரப்புகள் | ➢ OBT பயிற்சியின் ஊடாக ஊக்குவித்தல் மற்றும் குழுவைக் கட்டியமைத்தல்.<br>➢ சர்வேதச கலந்துரையாடல்<br>➢ மனித வள அபிவிருத்தி<br>➢ அரசதுறையில் உபாயமார்க்கத் தலைமைத்துவம்<br>➢ மலோசியாவில் தலைமைத்துவ இடமாற்றம்<br>➢ உபாயமார்க்க முகாமைத்துவம் |

பங்குபற்றிய அங்கத்தர்வர்களின் விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டள்ளது.

**MCDP 01**

| **இல** | **பெயர்** | **பதவி** | **நிறுவனத்தின் பெயர்** |
|---|---|---|---|
| 1 | திரு எம்.ஏ.ஐ.கே.மந்திரிரத்ன | உதவிச் செயலாளர் | நீதி அமைச்சு |
| 2 | திரு எம்.எல்.எம்.குசும்பால | தொழில் அலுவலர் II | தொழில் திணைக்களம் |
| 3 | செல்வி திருமதி பி.ஏ.எம்.ஆர்.சந்திரசேகர | மேலதிகப் பணிப்பாளர் (நிர்வாகம் மற்றும் நிதி) | தேசிய இளைஞர் படையணி |
| 4 | திரு ஆர்.எம்.ஏ.கே. விஜேரத்ன | மேலதிகப் பணிப்பாளர் – மத்திய மாகாணம் | தேசிய இளைஞர் படையணி |
| 5 | திரு மேஜர்.ஜி.எம்.யு. பண்டாரநாயக்க | நிலையப் பொறுப்பாளர் - NYC பயிற்சி நிலையம் - வாரியப்பொல | தேசிய இளைஞர் படையணி |
| 6 | திரு எல்.எச்.பி.சாதானந் | நிலையப் பொறுப்பாளர் - NYC பயிற்சி நிலையம் - தொடங்கஸ்லந்த | தேசிய இளைஞர் படையணி |
| 7 | திரு டபில்யூ.எம்.ரத்னசிறி | முகாமையாளர் (நன்மைகள் நிர்வாகம்) | ஊழியர் நம்பிக்கை நிதியச் சபை |
| 8 | திரு எச்.ஜி.ஜி.ஜே.தர்மசேன | பணிப்பாளர் நாயகம் | மனித வளம் மற்றும் தொழில் திணைக்களம் |

| | | | |
|---|---|---|---|
| 9 | செல்வி திருமதி ஆர்.எம்.டீ.வி.ராஜகுரு | உதவிச் செயலாளர் (நிர்வாகம்) | தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சு |
| 10 | திரு ஆர்.ஆர்,கே.நுகபிட்டிய | பணிப்பாளர் | முகாமைத்தவ கணக்காய்வுத் திணைக்களம் |
| 11 | திரு எஸ்.எம்.தயாரத்ன | பணிப்பாளர் | முகாமைத்தவ கணக்காய்வுத் திணைக்களம் |
| 12 | செல்வி திருமதி எம்.ஏ.கே.பி.விஜேவந்த | பணிப்பாளர் | முகாமைத்தவ கணக்காய்வுத் திணைக்களம் |
| 13 | செல்வி திருமதி ஐ.ஏ.மாலிகா பிரநாந்து | பணிப்பாளர் (ICT) | தொகைமதிப்பு புள்ளிவிபரங்கள் திணைக்களம் |
| 14 | செல்வி திருமதி சீ.குணவர்தன | உதவிச் செயலாளர் | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு |
| 15 | திரு கே.ஏ.லலிதாதீர | பணிப்பாளர் | தேசிய மனித வள அபிவிருத்திச் சபை |
| 16 | திரு ஆர்.டி.சீ.எஸ்.ராஜபக்ஷ | அபிவிருத்தி அலுவலர் | தேசிய மனித வள அபிவிருத்திச் சபை |
| 17 | செல்வி திருமதி ஆர்.எம்.ஏ.யு.கே.இரத்நாயக்க | ஆராய்ச்சி அலுவலர் | தேசிய மனித வள அபிவிருத்திச் சபை |
| 18 | திரு ஆர்.எம்.டி.குடாகம்மன | சிரேஸ்ட பொறியியலாளர் | இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் |
| 19 | திரு வி.பி.சமரவீர | சிரேஸ்ட பொறியியலாளர் | இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் |
| 20 | செல்வி திருமதி எஸ்.சியா தேவி | பொறியியலாளர் | இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் |
| 21 | திரு டபில்யூ.பி.சீ.டபில்யூ. திலகரத்ன | பொறியியலாளர் | இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் |
| 22 | திரு வை.பி.சி.த சில்வா | பிரதிப் பொது முகாமையாளர் கட்டுமானம் | இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் |
| 23 | திரு ஓ.வி.டபில்யூ. ஆர்.குணதிலகரத்ன | உதவிப் பொது முகாமையாளர் கட்டுமானம் | இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் |
| 24 | செல்வி திருமதி ஜயங்கனி நதிஷா சமரசிங்க | சிரேஸ்ட உதவிச் செயலாளர் | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு |
| 25 | திரு மனோகரன் சதீஸ் | உதவிப் பதிவாளர் | இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகம் |

இரண்டாவது நிகழச்சித்திட்டம் 2016 ஒக்டோபர் மாதத்தில் நடாத்தப்பட்டதுடன், இந்த நிகழ்ச்சித்திட்டத்தில் பங்குபற்றியவர்கள் சிங்கப்பூருக்கு ஒரு நாள் விஜயமொன்றை மேற்கொண்டது சிறப்பம்சமாகும். பங்குபற்றியவர்களின் விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

**MCDP 02**

| இல | பெயர் | பதவி | நிறுவனத்தின் பெயர் |
|---|---|---|---|
| **அரச மானியம் - மீண்டுவரும்** | 10 | **21,500,000.00** | **19,830,000.00** | **21,000,000.00** |
| **<u>அரச மானியம் - மூலதனம்</u>** | 11 | | | |
| அரச மானியம் - அபிவிருத்தி நடவடிக்கைகள் | | 6,656,903.22 | 3,882,047.84 | 8,000,000.00 |
| மானிய வேறுபாடு | | 4,732,933.84 | 4,984,302.00 | 4,900,000.00 |
| | | **11,389,837.06** | **8,866,349.84** | **12,900,000.00** |
| **வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் மீதான இலாபம் (நட்டம்)** | 12 | 1,073,187.14 | - | 1,000,000.00 |
| | | **1,073,187.14** | **-** | **1,000,000.00** |
| **அகற்றப்பட்ட சொத்துகள் மீதான இலாபம் (நட்டம்)** | 13 | **(5,662.59)** | **(15,625.68)** | **(7,000.00)** |
| **<u>ஏனைய வருமானம்</u>** | 14 | | | |
| நானாவித வருமானம் | | 91,583.13 | 8,901.20 | 100,000.00 |
| இடர் கடன் வட்டி | | 93,554.45 | 74,331.71 | 95,000.00 |
| IWSS ஆய்வு | | - | 4,580.57 | - |
| NVQ சான்றிதழ் உரிமையாளர் – காலி | | - | 19,000.00 | - |
| NVQ சான்றிதழ் உரிமையாளர் – பெலியத்த | | - | 6,000.00 | - |
| | | **11,389,837.06** | **112,813.48** | **195,000.00** |

| | | 2016 | 2015 | மதிப்பீடுசெய்ய ப்பட்டது |
|---|---|---|---|---|
| **<u>கூலி, சம்பளம் மற்றும் ஊழியர் நன்மைகள்</u>** | 15 | | | |
| சம்பளம் மற்றும் கூலி | | 7,190,064.68 | 6,349,736.22 | 7,061,000.00 |
| பதில் கடமை சம்பளம் | | 22,534.12 | 41,049.96 | 7,500.00 |
| விசேட கொடுப்பனவு | | 768,331.89 | 1,140,090.33 | 800,000.00 |
| வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு | | 2,351,322.58 | 2,359,810.32 | 2,400,000.00 |
| இடைக்காலக் கொடுப்பனவு | | 1,979,677.42 | 2,644,752.69 | 2,000,000.00 |
| சீராக்கல் கொடுப்பனவு | | 1,010,525.71 | - | - |
| போக்குவரத்துக் கொடுப்பனவு | | 400,000.00 | 360,000.00 | 400,000.00 |
| எரிபொருள் கொடுப்பனவு | | 210,600.00 | 232,850.00 | 250,000.00 |
| ஊ.சே.நி | | 1,130,291.11 | 1,409,619.21 | 1,500,000.00 |
| ஊ.ந.நி | | 282,554.24 | 352,405.12 | 300,000.00 |
| மேலதிக நேரக் கொடுப்பனவு | | 117,509.17 | 91,894.00 | 120,000.00 |
| விடுமுறைக் கொடுப்பனவு | | 9,918.75 | 28,544.25 | 12,000.00 |
| தற்காலிக சம்பளம் | | 150,144.00 | 343,401.40 | 180,000.00 |
| பணிக்கொடைச் செலவுகள் | | 82,684.87 | 268,050.13 | 120,000.00 |
| | | **15,706,158.54** | **15,622,203.63** | **15,150,500.00** |
| **<u>மானியங்கள் மற்றும் ஏனைய மாற்றல் கொடுப்பனவுகள்</u>** | 16 | | | |
| செய்தித்தாள் | | 245,768.00 | 80,928.70 | 350,000.00 |
| ஊழியச் சந்தை கற்கை | | 431,733.75 | 298,004.54 | 680,000.00 |
| ஊழியர் பயிற்சி மற்றும் அபிவிருத்தி | | 1,802,098.87 | 1,218,751.48 | 1,800,000.00 |
| மாத்தறை மாவட்ட ஆய்வு | | 81,081.90 | 490,156.72 | 100,000.00 |
| தர மற்றும் உற்பத்திதிறன் நிகழ்ச்சித்திட்டம் | | -144,462.00 | 118,986.47 | 110,000.00 |
| தலைமைத்துவத்தை கட்டியெழுப்புவதற்கு மனிதவள உபாயமார்க்கத்தை அபிவருத்தி செய்தல் | | 228,695.00 | 162,655.00 | 250,000.00 |
| ரக்கியா அருண நிகழ்ச்சித்திட்டம் | | 1,624,177.48 | 964,655.37 | 1,500,000.00 |
| தொழில்நுட்பத் துறையில் திறன் இடைவெளிக் கற்கை | | 131,449.25 | 36,670.75 | 400,000.00 |
| SME துறையைப் பலப்படுத்தல் | | 529,847.25 | 302,099.53 | 800,000.00 |
| சுற்றுலாத் துறையில் திறன் இடைவெளிக் கற்கை | | 905,510.49 | 99,321.55 | 1,000,000.00 |
| கல்வித்துறை செலவான 1.5% மொ உ உற்பத்தியை 6% ஆக அதிகரித்தல். | | - | 66,357.25 | - |

| | | 2016 | 2015 | மதிப்பீடுசெய்ய ப்பட்டது |
|---|---|---|---|---|
| மாணவர்களுக்கான பட்ட /டிப்ளோமா மீதான கருத்திட்ட முன்மொழிவு | | - | 101,176.05 | - |
| HRM விருதுகள் | | 1,310.00 | - | 50,000.00 |
| பணிப்பாளர் கையேடு (KPMG) | | 122,620.70 | - | 200,000.00 |
| மனித மூலதன மாநாடு | | 126,203.04 | - | 130,000.00 |
| அபிவிருத்திப் பொறிமுறை | | 13,165.00 | - | 15,000.00 |
| NHRDC ஊழியர் அபிவிருத்தி முன்னெடுப்புகள் | | 244,884.16 | - | 900,000.00 |
| | | **6,633,006.94** | **3,939,763.41** | **8,285,000.00** |
| **வழங்கல்கள் மற்றும் பயன்படுத்தப்பட்ட நுகர்வுகள்** | 17 | | | |
| எழுது கருவிகள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | | 327,750.36 | 342,603.01 | 350,000.00 |
| எரிபொருள் மற்றும் உராய்வு நீக்கிகள் | | 419,555.00 | 331,706.00 | 350,000.00 |
| சீரூடைகள் | | -42,645.00 | - | 42,650.00 |
| | | **789,950.36** | **674,309.01** | **742,650.00** |
| **தேய்மானம் மற்றும் கடன் தீர்ப்புச் செலவுகள்** | **6** | **5,076,989.77** | **5,193,891.31** | **5,100,000.00** |
| **பயணச் செலவு, பிழைப்பூதியம் மற்றும் கொடுப்பனவு** | 18 | | | |
| உள்நாட்டு பயணச் செலவு மற்றும் பிழைப்பூதியம | | 15,902.50 | 8,387.50 | 68,880.00 |
| கணக்காய்வு அங்கத்தவர்களுக்கான கொடுப்பனவு | | 54,000.00 | 78,000.00 | 72,000.00 |
| சபை அங்கத்தவர்களுக்கான கொடுப்பனவு | | 120,000.00 | 61,200.00 | 150,000.00 |
| | | **189,902.50** | **147,587.50** | **290,880.00** |
| **பயன் மற்றும் சேவைகள்** | 19 | | | |
| சோலைவரி (Rates) | | 44,800.00 | 40,320.00 | 40,320.00 |
| மின்சாரம் | | 659,644.42 | 662,538.20 | 670,000.00 |
| தண்ணீர் | | 40,409.78 | 42,825.32 | 40,000.00 |
| தொலைபேசிக் கட்டணம் மற்றும் வாடகை | | 311,755.89 | 231,154.44 | 340,000.00 |
| தபால் மற்றும் டெலெக்ஸ் கட்டணம் | | 17,470.00 | 8,240.00 | 30,000.00 |

| | 2016 | 2015 | மதிப்பீடுசெய்யப்பட்டது |
|---|---|---|---|
| சுத்திகரிப்புச் சேவை | 593,927.64 | 593,927.64 | 593,930.00 |
| விளம்பரம் | 202,297.50 | 68,931.00 | 150,000.00 |
| பாதுகாப்பு சேவை | 910,347.50 | 910,349.50 | 910,350.00 |
| இணையம் | | 142,621.40 | 180,000.00 |
| ஏனைய பயனபடுத்தல் மற்றும் ஏனைய | 164,280.00 | | |
| சேவைகள் | 232,517.50 | 249,832.47 | 332,000.00 |
| சட்டக் கட்டணங்கள் | 19,000.00 | - | 40,000.00 |
| | **3,196,272.23** | **3,031,239.97** | **3,326,600.00** |
| **பராமரிப்புச் செலவுகள** 20 | | | |
| கட்டடம் மற்றும் கட்டமைப்புத் திருத்தம் மற்றும் பராமரிப்பு | 3,600.00 | 39,037.00 | 15,000.00 |
| | 1,003,375.79 | 386,873.49 | |
| | | | 400,000.00 |
| வாகனத் திருத்தம் மற்றும் பராமரிப்பு | | | |
| வாகனக் காப்புறுத | 149,949.64 | 358,770.10 | 350,000.00 |
| அலுவலக உபகரணத் திருத்தம் மற்றும் பராமரிப்பு | 117,268.63 | 167,535.40 | 125,000.00 |
| கணணித் திருத்தம் மற்றும் பராமரிப்பு | 57,526.60 | 43,825.50 | 50,000.00 |
| ஏனைய சொத்துக்களின் திருத்தம் மற்றும் | | 327,982.42 | 65,000.00 |
| பராமரிப்பு | 64,506.47 | | |
| | **1,396,227.13** | **1,324,023.91** | **1,005,000.00** |
| **ஏனைய செலவுகள்** 21 | | | |
| கணக்காய்வுக் கட்டணம் | 80,500.00 | 80,500.00 | 80,500.00 |
| செய்தித்தாள் மற்றும் பருவ வெளியீகள் | 24,380.00 | 68,825.00 | 25,000.00 |
| ஊழியர் நலன்புரி | 47,775.00 | 30,375.00 | 40,000.00 |
| மருத்துவச் செலவுகள் | - | 3,546.00 | - |
| புத்துணர்வு | 56,333.00 | 50,631.50 | 50,000.00 |
| நூலக சேவை | - | 19,500.00 | - |
| தேசிய கடதாசிக் கூட்டுத்தாபனம் | - | 1,770.00 | - |
| | **208,988.00** | **174,647.50** | **195,500.00** |

**குறிப்பு இலக்கம் 12 – விளக்கம்**

**வருமானம்**

| | |
|---|---|
| பாடநெறிக் கட்டணம் | 8,230,000.00 |
| கழி | |
| செலவுகள் | |
| டிக்கட்கள் | 1,431,759.00 |
| விசா | 183,254.00 |
| மலேசியா புத்ர பல்கலைக்கழகத்திற்கான கொடுப்பனவு | 4,584,087.14 |
| வள நபர் கட்டணம் (உள்ளூர் தொடர்கள்) | 680,000.00 |
| மண்டப முன்பதிவு | 210,925.71 |
| சிற்றுண்டிகள் | 20,882.00 |
| ஏனையவை | 45,905.01 |
| **மொத்தச் செலவுகள்** | **7,156,812.86** |
| **வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் மீதான மிகை (பற்றாக்குறை)** | **1,073,187.14** |

## 11. குறிப்புகள், முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் சுருக்கம், விளக்கக் குறிப்புகள்

**1.** இலங்கை தேசிய மனித வள அபிவிருத்திச் சபை 1997ம் ஆண்டு 18ம் இலக்கச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டது. இச்சட்டத்தின் கீழ் நிறுவனத்திற்கு மனித வள அபிவிருத்திக்கு அவசியமான அனைத்து மனித வள அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் கொள்கைகளை அமுல்படுத்தல் போன்ற நடவடிக்கைகள் சாட்டப்பட்டுள்ளது.

**2. கணக்குகளை விளக்கல் மற்றும் நிதியில் கூற்றுகளை வழங்குவதற்கான அதிகாரம்**

1971ம் ஆண்டு 38ம் இலக்க நிதிச் சட்டத்தின் 14ம் பிரிவுக்கு அமைவாக, இலங்கை தேசிய மனித வள அபிவிருத்திச் சபை பொதுக் கூட்டுத்தாபனமாக இருப்பதனால், நிறுவனத்தின் நிதியாண்டு முடிவடைந்தவுடன் உடனடியாக, நிறுவனத்தின் அதிகாரத்திற்காக அவ்வருடத்தில் அதன் கொள்கை மற்றும் நிகழ்ச்சித்திட்டம் என்பவற்றுக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் தொடர்பான வருடாந்த அறிக்கையின் முன்வரைபினை தயாரித்தல் வேண்டும். இந்த அறிக்கை, அக்காலப்பகுதியில் உரிய அமைச்சரினால் வழங்கப்பட்ட யாதேனும் வழிகாட்டல்களைக் கொண்டிருக்கும். இந்த அறிக்கைகளின் பிரதிகளை, வருடம் முடிவடைந்த நான்கு மாதங்களின் பின்னர், உரிய அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர் (அவர் உரிய அமைச்சராக இல்லாத பட்சத்தில்), திட்டமிடல் அமைச்சர் மற்றும் கணக்காய்வாளர் நாயகத்திற்கு வழங்குதல் வேண்டும்.

1971ம் ஆண்டு 38ம் இலக்க நிதிச் சட்டத்தின் 14ம் பிரிவுக்கு அமைவாக, ஒவ்வொரு நிதியாண்டும், கணக்காய்வாளர் நாயகம் யாதேனும் குறித்துரைக்கப்பட்ட வடிவத்தில் சமர்ப்பிக்குமாறு கோரப்படின் அவ்வடிவத்தில், ஒவ்வொரு நிதியாண்டும் நிதியாண்டு முடிவடைந்து நான்கு மாதங்களின் பின்னர் நிறுவனத்தின் கணக்கை கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும். எந்தவொரு நிறுவனமும் இந்த உப பிரிவு ஏற்பாடுகளுக்கு அமைவாக அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு தவறின் இச்சட்டத்தின் கீழ் குற்றமிழைத்ததாகக் கருதப்படுவதுடன், மஜிஸ்ரேட்டின் முன்னர் நம்பிக்கைகைய இழந்தால், ரூபா ஆயிரத்திற்கு குறைவில்லாத தண்டப்பணத்தைச் செலுத்துதல் வேண்டும்.

**3. இணக்கக் கூற்று**

இலங்கை தேசிய மனித வள அபிவிருத்திச் சபையின் கணக்கீட்டு முறை, இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட இலங்கை அரச சேவை கணக்கீட்டு நியமத்திற்கு அமைவாக தயாரிக்கப்படுகின்றது.

**4. அளவீட்டு அடிப்படை**

சபையின் நிதிக் கூற்றுக்கள் வரலாற்று கிரய அடிப்படையில், 2008, 2011, 2014 மற்றும் 2016ம் ஆண்டில் இலங்கை மதிப்பீட்டுத் திணைக்களத்தினாலும் சுயாதீன மதிப்பீட்டாளர்களினாலும் குறிப்பிட்ட தளபாடம் மற்றும் பொருத்திகள், அலுவலக உபகரணங்கள், மினசார பொருத்திகள் மற்றும் உபகரணங்கள், கணணிகள், வாகனங்கள் மற்றும் ஏனைய சொத்துக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட மீள்மதிப்பீடுகள் தவிர்த்து தயாரிக்கப்படுகின்றது.

**5. சொத்து மதிப்பீட்டுக்கான அடிப்படை**

**5.1** சொத்துக்கள், பொறி மற்றும் உபகரணங்கள் என்பவை குறைந்து செல்லும் தேய்மானத்தின் அடிப்படையில் மதிப்பிடப்பிடப்படுகின்றது..

**5.2** சொத்துக்கள், பொறி மற்றும் உபகரணங்கள் என்பவற்றுக்கு தேய்மானம் அறவிடப்பட்டு மதிப்பிடப்பட்ட பயன்படுத்தல் காலத்தின் பின்னர் பதிவழிப்பு மேற்கொள்ளப்பட்டது.

**5.3** 2009ம் ஆண்டுக்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்டவைகளுக்கு கொள்வனவு செய்யப்பட்ட ஆண்டுக்கு தேய்மானம் வழங்கப்படுவதில்லை மற்றும் அவை அககற்றப்படும் பொழுது முழு ஆண்டுக்கான தேய்மானம் வழங்கப்பட்டது மற்றும் 2009ம் ஆண்டின் பின்னர் கொள்வனவு செய்யப்பட்ட / அகற்றப்பட்ட திகதியின் அடிப்படையில் தேய்மானம் கணிக்கப்படுகின்றது.

**5.4** நுகர்வுக் களஞ்சியம் குறைந்த ஆகுசெலவு மற்றும் தேறிய சாத்தியமான பெறுமதியில் மதிப்பிடப்படுகின்றது.

**6. தேய்மானம்**

சொத்துக்களின் வகை மற்றும் தேய்மான வீதங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது. சொத்துக்களின் தன்மை மற்றும் அவற்றின் பயன்பாட்டின் அடிப்படையில் சொத்துக்கள் வகைப்படுத்தப்பட்டள்ளது.

| | |
|---|---|
| கட்டடம் மற்றும் கட்டமைப்பு | 2.5% |
| தளபாடம் மற்றும் பொருத்திகள் | 10% |
| அலுவலக உபகரணங்கள் | 10% |
| மினசாரப் பொருத்திகள் மற்றும் உபகரணங்கள் | 20% |
| கணணிகள் | 20% |
| கணணி மென்பொருள் | 25% |
| வாகனங்கள் | 20% |
| புத்தகங்கள் | 10% |
| ஏனைய சொத்தக்கள் | 10% |

## 7. அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னரான நிகழ்வுகள்

அனைத்து பொருளாக்கப்பட்ட ஐந்தொகை நிகழ்வுகளும் கருத்தில் கொள்ளப்பட்டுள்ளது மற்றும் அவசிய சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டது அல்லது நிதிக்கூற்றில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. கட்டடத்தின் சீரமைப்பு பணிகள் 2017 ஜனவரியில் இருந்து ஆரம்பிக்கப்பட்டள்ளதுடன் மேற்கொள்ளப்பட்ட ஆரம்பச் செலவுகள் அனைத்தும் நடைமுறைச் செலவுகளின் கீழ் குறைவேலையாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. மொத்த சீரமைப்புப் பணிக்கான மதிப்பீட்டுத் தொகை ரூபா 9,897,587.66/-

## 8. அரச மானியத்திற்கான கணக்கீடு

இலங்கை தேசிய மனித வள அபிவிருத்திச் சபைக்கு பொதுத் திறைசேரியினால் அரசின் மூலதன மற்றும் மீண்டுவரும் மானியங்களாக கிடைக்கப் பெற்றவையின் மூலம் நிறுவனத்தின் மீண்டுவரும் மற்றும் மூலதனச் செலவுகள் மேற்கொள்ளப்பட்டது. இலங்கை தேசிய மனித வள அபிவிருத்திச் சபையின் செயற்பாடுகளுக்குப் பயன்படுத்தப்பட்ட தொகை மற்றும் இவ்வருடம் தேய்மானமாக அறிவிடப்பட்ட தொகை என்பவை மூலதனச் சொத்துக்களின் பயன்பாட்டுக்கால முறையியல் அடிப்படை மீதான வருமானமாக அடையாளம் காணப்பட்டது.

## 9. ஓய்வூதிய நன்மைச் செலவு

### 9.1 பங்களிப்பு திட்டத்தை வரையறுத்தல் – ஊ.சே.நி மற்றும் ஊ.ந.நி

ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பவற்றுக்கு தகைமை பெற்ற அனைத்து ஊழியர்களுக்குமான பங்களிப்பு உரிய பங்களிப்பு நிதியத்தின் ஊடாக உரிய விதிமுறைகளின் அமைவாக அணவல் செய்யப்பட்டது.

### 9.2 ஓய்வூதியக் பணிக்கொடை

1983ம் ஆண்டு 12ம் இலக்க ஒய்வூதிய கொடுப்பனவுச் சட்டத்தின் கீழ் வரும் அனைத்து ஊழியர்களுக்குமான கொடுப்பனவுகள், இலங்கை கணக்கியல் நியம இலக்கம் 19இல் குறிப்பிடப்பட்ட ‘ஊழியர் நன்மைகள்’ என்பதற்கு அமைவாக நிதிக்கூற்றில் ஒய்வூதியப் பணிக்கொடைக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டது. பணிக்கொடை பொறுப்பானது வெளிவாரியாக நிதியிடப்படவில்லை அல்லது அட்டுறுவாக பெறுமதியிடப்படவில்லை.

## 10. நிதிச் செயற்பாடுகள்

சபை அதன் மூலதனச் சொத்துக்களின் தொழிற்பாடு மற்றும் பராமரித்தல் என்பவற்றின் போது வினைத்திறமையுடன் செயற்பட்டதுடன் வருமானத்தை அறவிட்டது. வருமானச் செலவுகளின் மிகை அல்லது பற்றாக்குறை, அனைத்து பொறுப்புகள் மற்றும் சொத்துக்களின் தேய்மானம் என்வற்றின் ஏற்பாடுகளின் பின்னர் ஏற்பட்டதாகும்.

## 11. நிதிச் செயற்பாடுகள்

சபை அதன் மூலதனச் சொத்துக்களின் தொழிற்பாடு மற்றும் பராமரித்தல் என்பவற்றின் போது வினைத்திறமையுடன் செயற்பட்டதுடன் வருமானத்தை அறவிட்டது. வருமானச் செலவுகளின் மிகை அல்லது பற்றாக்குறை, அனைத்து பொறுப்புகள் மற்றும் சொத்துக்களின் தேய்மானம் என்வற்றின் ஏற்பாடுகளின் பின்னர் ஏற்பட்டதாகும்.

## 12. அமைச்சினால் சாட்டப்பட்ட வாகனங்கள்

01.02.2016ம் திகதியில் இருந்து தற்காலிக அடிப்படையில் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகார அமைச்சினால், இலங்கை தேசிய மனித வள அபிவிருத்தி சபைக்கு WP- PD 6170 எனும் வாகன இலக்கம் மற்றும் JNICJUD22Z0116541 செஸி இலக்கமுடைய வாகனம் சாட்டப்பட்டுள்ளது.

## 12. கணக்காய்வு அறிக்கை மற்றும் பதில

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
**AUDITOR GENERAL'S DEPARTMENT**

මගේ අංකය / எனது இல. / My No. } விரீவலை/ச/என்எச்ஆர்டீசீ/1/16/20 ඔබේ අංකය / உமது இல. / Your No. }    දිනය / திகதி / Date } 2017 யூன் 20

தலைவர்,
இலங்கை தேசிய மனித வளங்கள் அபிவிருத்திப் பேரவை.

**இலங்கை தேசிய மனித வளங்கள் அபிவிருத்திப் பேரவையின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சி) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.**

---

இலங்கை தேசிய மனித வளங்கள் அபிவிருத்திப் பேரவையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) பிரிவு மற்றும் 1997 இன் 18 ஆம் இலக்க இலங்கை தேசிய மனித வளங்கள் அபிவிருத்திப் பேரவை அதிகாரச்சட்டத்தின் 24 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சி) பிரிவின் பிரகாரம் பேரவையின் ஆண்டறிக்கையுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. - இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34   +94-11-2887223   oaggov@sltnet.lk   www.auditorgeneral.gov.lk

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

2. நிதிக்கூற்றுக்கள்

2.1 அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்களானவை இலங்கை தேசிய மனித வளங்கள் அபிவிருத்திப் பேரவையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதி செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.2.1 பெற வேண்டிய கணக்குகள்

முன்னாள் தலைவரிடமிருந்து சபை அறவிட வேண்டிய ரூபா 31,050 தொகையும் அந்த தலைவருக்கு சபையால் வழங்கப்பட்டிருந்த ரூபா 40,112 பெறுமதியான பொருட்களும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் மீளப் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

3. நிதி மீளாய்வு

3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், சபையின் நிதி விளைவுகள் ரூபா 945,003 மிகையொன்றாக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 1,314,129 ஆனமையால், முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 2,259,131 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. திறைசேரியால் வழங்கப்பட்ட மானியங்கள் ரூபா 4,193,487 ஆல் அதிகரித்தமை மற்றும் வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களிலிருந்து ரூபா 1,073,187 ஆன இலாபம் உழைத்தமை மேற்படி அதிகரிப்பிற்கு பிரதான காரணங்களாக இருந்தன.

மீளாய்வாண்டினதும் கடந்த 4 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்யும் போது 2012 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் நிதி பற்றாக்குறையொன்றும் ஏனைய ஆண்டுகளில் நிதி மிகைகளும் காட்டியிருந்தது. ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றை கருத்திற் கொள்ளும் போது நிறுவகத்தின் பங்களிப்பு 2012 ஆம் ஆண்டில் ரூபா 8,838,045

தொகையான நிறுவகத்தின் பங்களிப்பு 2016 ஆம் ஆண்டு ஆண்டளவில் ரூபா 21,728,153 வரை தொடர்ச்சியான அதிகரிப்பொன்றினைக் காட்டியிருந்தது.

4. **செயற்பாட்டு மீளாய்வு**

4.1 **செயலாற்றல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

1997 ஆண்டின் 18 ஆம் இலக்க இலங்கை தேசிய மனித வளங்கள் அபிவிருத்தி பேரவை அதிகாரச்சட்டத்தின் 14(1) ஆம் பந்தியின் பிரகாரம், வேலைவாய்ப்புக்கள், பயிற்சி மற்றும் கல்வி, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தை பயன்படுத்தல், வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துதல், தீங்கு விளைவிக்கும் நபர்களின் குழுக்களுக்காக (Disadvantaged group) சமூக பாதுகாப்பினைத் திட்டமிடல் உள்ளடங்கலாக தேசிய மனிதவளக் கொள்கையின் அனைத்து பிரிவுகள் தொடர்பிலும் ஆராய்ந்து பார்த்து அந்த கொள்கைகளை காலத்திற்கு காலம் மீளாய்வு செய்தல், அந்த நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்படுகின்றமையை தேடிப்பார்த்தல் என்பன பிரதான நோக்கங்களாகும். இந் நோக்கங்களை அடைதல் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தேசிய மனித வளங்கள் கொள்கைகளுக்காக விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தலும், தீங்கு விளைவிக்கும் குழுக்களுக்கான சமூக பாதுகாப்பினை ஒழுங்கமைத்தல் மற்றும் அரசினால் அங்கீகரிக்கப்படும் மனிதவள அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துதனை ஆராய்ந்து பார்த்தல் போன்ற நோக்கங்களை அடைவதற்காக பேரவையினால் மீளாய்வாண்டினுள் நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் தேசிய மனிதவளக் கொள்கையினை மீளாய்வு செய்யும் பொறுப்பு பேரவைக்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும், பொருளாதார அலுவல்கள் தொடர்பான அமைச்சரவையின் உப குழுவினால் 2012 ஆம் ஆண்டு அது தொழில் அமைச்சிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது.

(இ) செயல்நடவடிக்கைத் திட்டத்தின் மூலம் இலக்கிடப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2016 ஆண்டில் விநியோகிப்பதற்கு நிர்ணயிக்கப்பட்ட தொழில் சந்தை தொடர்பான அறிக்கை 2017 மார்ச் 31 ஆந் திகதி வரை வெளியிடப்பட்டிருக்கவில்லை.

(ii) சுற்றுலா, ஆடை மற்றும் தகவல் தொழில்நுட்ப துறைகளில் தொழில் சந்தர்ப்பங்கள் தொடர்பாக அறிவூட்டுவதற்காக 15 பிராந்திய செயலமர்வுகளை நடாத்துவதற்கு ரூபா 1,500,000 ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டினுள் ரூபா 882,000 செலவு செய்து சுற்றுலாத்துறைக்காக 06 செயலமர்வுகள் நடாத்தப்பட்டிருந்தன.

(iii) ஆண்டினுள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக செய்யப்பட்ட நிதிஏற்பாடுகளில் 24 சதவீதம் செலவிடப்படாதிருந்ததுடன் 3 நிகழ்ச்சித்திட்டங்களின் செயலாற்றல் 10 சதவீதம் முதல் 57 சதவீதம் வரையானதாகும்.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1997 இன் 18 ஆம் இலக்க மனித வளங்களை அபிவிருத்தி செய்யும் தேசிய பேரவையை தாபிக்கும் அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் மனித வள அபிவிருத்திக்குரிய கொள்கைகளை உருவாக்குதல், மேம்படுத்தல் மற்றும் செயற்படுத்துவதற்கு பங்களிப்பதற்காக 11 அமைச்சுக்களின் செயலாளர்கள், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர், 4 தொழிற்கல்வி நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் அமைச்சினால் நியமிக்கப்பட்ட துறையின் கூடிய அனுபவமுள்ள 5 நபர்கள் உள்ளடக்கப்பட்ட 20 அங்கத்தவர்களுடன் கூடிய குழுவொன்றை நியமித்து மீளாய்வாண்டின் போது 3 கூட்டங்கள் நடாத்தப்பட்டிருந்த போதிலும், கொள்கைகளை உருவாக்குவதற்கும், மேம்படுத்துவதற்கும் உரிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிலையான சொத்துக்கள் பதிவேட்டின் பிரகாரம் ரூபா 354,332 கிரயமான 26 நிலையான உருப்படிகள் பௌதீக ரீதியாக இல்லையென பரிசோதனை குழுவின் அறிக்கையின் பிரகாரம் அவதானிக்கப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பாக போதியளவு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.3 முறையாக கையளிக்கப்படாத ஆதனங்களில் செயற்திட்டங்களை ஆரம்பித்தல்

வேறொருஅமைச்சிற்குரிய கட்டிடமொன்றில் தாபிக்கப்பட்டுள்ள சபை அலுவலகத்தை நவீனமயப்படுத்துவதற்காக 2016 திசெம்பர் 30 ஆந் திகதி தனியார் ஒப்பந்தக்காரருடன் ரூபா 8,916,745 பெறுமதிக்கு ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும் சபை அலுவலகத்தை நீண்டகாலமாக அக்கட்டிடத்தில் பராமரித்துச் செல்வதற்காக குறித்த அமைச்சுடன் முறையான உடன்படிக்கையொன்றோ அல்லது புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றோ

கைச்சாத்திடப்படாதிருந்ததுடன் ஒப்பந்தக்காரருடன் கைச்சாத்திடப்பட்டிருந்த உடன்படிக்கையின் பிரகாரம் நவீனமயப்படுத்தும் போது அப்புறப்படுத்தப்படும் பொருட்களுக்காக ரூபா 25,000 ஆன கட்டணமொன்று அறவிடப்பட்ட போதிலும், அகற்றுவதற்கு கைச்சாத்திடப்பட்ட பொருத்திகளை இனங்கண்டு பட்டியல்படுத்தி பெறுமதி மதிப்பிடப்பட்டிருக்கவில்லை.

## 4.4 பதவியணியினர் நிர்வாகம்

பேரவையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 31 ஆக இருந்ததுடன் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 05 வெற்றிடங்கள் காணப்பட்டன. எவ்வாறாயினும் உருவாக்கச் சட்டத்தின் விரிவான நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக போதியளவு பதவியணியினர் சபையிடம் இல்லாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 5.1 உள்ளகக் கணக்காய்வு

பேரவையிலுள் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று தாபிக்கப்படாதிருந்ததுடன் அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் மூலமும் ஆண்டின் போது எவ்வித கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தின் பணிப்பாளரால் 2011 நவம்பர் 15 ஆந் திகதி விநியோகிக்கப்பட்டிருந்த மஎம்ஏ/06 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கை மூலம் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைகளின் போதுமான தன்மையை மதிப்பிடுவதற்காக உள்ளகக் கணக்காய்வு பயன்படுத்தப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக உள்ளகக் கணக்காய்வின் தேவைப்பாடு குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது பேரவையின் தலைவரது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படவேண்டும்.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் |
| --- | --- |
| (அ) பாதீட்டுக் கட்டுப்பாடு | ஆண்டின் இறுதியில் பாதீடு திருத்தம் செய்யப்பட்டிருந்தமை. |
| (ஆ) சொத்துக்கள் கட்டுப்பாடு | சொத்துக்களை அகற்றும் போது சுற்றறிக்கை ஏற்பாடுகள் பின்பற்றப்படாமை. |
| (இ) செயலாற்றல் | அதிகாரச்சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக போதியளவு நிகழ்ச்சித் திட்டங்களை தயாரித்து செயற்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்தப்படாமை. |
| (ஈ) பெறுகைகள் செயற்பாடு | நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்துவதற்காக வெளி நிறுவனங்களை தெரிவுசெய்யும் போது பெறுகை செயற்பாடு பின்பற்றப்படாமை. |

ஒப்பம்: எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

ஒப்பம்./எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

எனது இலக்கம்: 3/2/12/1 2017.09.21

கணக்காய்வாளர் தலைமை அதிபதி
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
பத்தரமுல்ல

இலங்கை தேசிய மனித வள அபிவிருத்திச் சபையின் 2016 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுகள் மீது 1971ம் ஆண்டின் 38ம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சி) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.

மேற்குறித்த விடயம் தொடர்பான இலக்கம் VTY/E/NHRDC/1/16/20 மற்றும் 20.06.2017ம் திகதியுடைய அறிக்கை தொடர்பாக.
அதன்படி எனது தெளிவுபடுத்தலை கீழ்வருமாறு சமர்ப்பிக்கின்றேன்.

**2.2 நிதி அறிக்கை தொடர்பாக கருத்துத் தெரிவித்தல்**

**2.2.1 கிடைக்க வேண்டிய கணக்கு.**

முன்னர் இருந்த தலைவரினால் மேலும் செலுத்த வேண்டிய ரூபா 40,112 தொகை அவர் பெற்றுக்கொண்ட டிஜிடல் கமரா, டேட்டா கேபில், கமரா பை, இன்டேர்னர் ஹார்ட் டிஸ்க் போன்ற காரியாலய உபரணங்களுக்கானதாகும். அதனை அறவிடுவதற்கு நடுவர் நீதிமன்றத்திற்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. மூன்று வருடங்களாக முன்னைய தலைவர் விசாரணைக்கு அழைக்கப்பட்ட போதும் அங்கு சமூகமளிக்கவில்லை. பணிப்பாளர் தொலைபேசி ஊடாக அவருடன் மேற்கொண்ட உரையாடலின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட தெளிவுபடுத்தலின் பின்னர் உரிய பண்டங்களை ஒப்படைப்பதற்கு அவர் உடன்பட்டுள்ளார். அத்துடன் இது தொடாபாக பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டதுடன், வழக்கு தொடர்பான கொடுப்பனவை பெற்றுக்கொள்ளல் வினைத்திறனுடைய நடவடிக்கை அல்ல என்பதனால் அமைச்சின் செயலாளரிடம் இதற்கான ஆலோசனை கோரப்பட்டுள்ளது.

**3. நிதி மீளாய்வு**

3.1. உடன்படுகின்றேன்.

**4. தொழிற்பாட்டு மீளாய்வு**

**4.1 செயலாற்றுகை**

(அ) இது தொடர்பாக 2016ம் ஆண்டுக்கு முன்னர் நிகழ்ச்சித்திட்டங்கள் சில ஒழுங்குசெய்யப்பட்டு நடாத்தப்பட்டது. எனினும் இவ்வருடத்தில் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பத்தை பயன்படுத்தல்

தொடாபான விசேட கருத்திட்டம் எதனையும் செயற்படுத்த முடியவில்லை. அத்துடன் நிறுவனத்தின் நோக்கம் அனைத்தையும் ஒரு வருடத்தினுள் நிறைவேற்றுவதற்கு நிறுவனத்தினுள் போதியளவு மனித வளம் இல்லையென்பதனால், தற்போதுள்ள மனிதவளத்தைப் பயன்படுத்தி முன்னிலைப்படுத்த வேண்டிய 17 கருத்திட்டங்கள் 2016ம் ஆண்டினுள் செயற்படுத்தப்பட்டது.

(ஆ) தேசிய மனித வளக் கொள்கைகயை மீளாய்வு செய்வதற்கான நடவடிக்கைகள் தொடாபாக தொழில் திணைக்களத்தின் மனித வளப் பிரிவின் ஊடாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன், எங்கள் நிறுவனம் அப்பணிகளில் ஈடுபட்டால் தேசிய வள விரயமேற்படுவதனால், எங்கள் நிறுவனம் அத்திணைக்களத்தின் மனிதவளப் பிரிவுடன் இணைந்து உரிய பணிகளையாற்றுவதற்கு ஒத்துழைப்பை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(இ)(i) தொழில் சந்தை தொடர்பாக முன்வரைவு அறிக்கையை வழங்குவதற்கு பொறுப்பாக இருந்த பேராசிரியர் அனுசிங்க வெளிநாட்டுக்கு செல்லவேண்டிய நிலை ஏற்பட்டது. அதனால் அந்த அறிகையைச் சமர்ப்பித்தல் மேலும் காலதாமதமையும் என அறிவித்துள்ளார். அதனால் 2017 டிசம்பர் 15ம் திகதிக்கு முன்னர் அந்த இறுதி அறிக்கையை வழங்குமாறும், அது தொடர்பாக பெற்றுக்கொண்ட தகவல்களை சமர்ப்பிக்குமாறும் கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

ii) ஏற்றுக்கொள்ளவில்லை

திருத்தப்பட்ட செயற்பாட்டுத் திட்டத்திற்கு அமைவாக சுற்றுலா, ஆடை மற்றும் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான துறைகளில் காணப்படும் தொழில்வாய்ப்புகள் தொடர்பாக பிரதேச மட்டத்தில் 6 அறிவூட்டும் நிகழ்ச்சிகள் திட்டமிடப்பட்டிருந்ததுடன், அவை திட்டமிட்டவாறு நடாத்தப்பட்டுள்ளது.

iii) திருத்தப்பட்ட செயற்பாட்டுத் திட்டத்திற்கு அமைவாக சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளை அடையாளம் கண்டு வலுவூட்டும் நிகழ்ச்சிகளின் கீழ் 6 நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டதுடன், அந்த 6 நிகழ்ச்சிகளும் பூர்த்திசெய்யப்பட்டுள்ளது.

1. **14(1)இலங்கை தொழில் சந்தையில் காணப்படும் வாய்ப்புகள் தொடாபான வருடாந்த அறிக்கை**

   தொழில் சந்தை தொடாபான முன்வரைவு அறிக்கையை 2017 டிசம்பர் மாத இறுதியில் வெளியிடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டள்ளது.

2. **14(2)தொழில்நுட்பத் துறையில் காணப்படும் இடைவெளிக் கற்கையை பூர்த்திசெய்தல்.**

   தகவல் தொழில்நுட்பத் துறையில் காணப்படும் திறன் இடைவெளிக் கற்கை கருத்திட்டத்திற்கு உரிய தகவல்கள் தொழில்நுட்பக் குழுவினால் தயாரிக்கப்பட்டு

கலந்துரையாடல் சுற்றுக்கள் பல மேற்கொள்ளப்பட்டு, அதன் பயனாக இத்துறையில் நிபுணத்தவம் பெற்றவரினால் சுயவிருப்புடன் அறிக்கை தயாரிக்கப்பட்டள்ளதுடன், அது மனித வள சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டள்ளது. மேலுத் தகவல் தொழில்நுட்பத் துறைபற்றிய கற்கை வரையறுக்கப்பட்டள்ளதனால் குழுவின் விதப்புரைக்கு அமைவாக ஆய்வொன்றை நடத்துவதற்கு எங்களினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டள்ளதுடன், அதற்கான கேள்விக்கொத்தக்கு 11 நபர்கள் மட்டுமே பதிலளித்திருந்தனர். அது ஆராய்ச்சி அறிக்கைகக்கு போதுமானதாக இல்லாததனால், மீண்டும் ஞாபகமூட்டல் கடிதங்களை அனுப்பிப் பெற்றுக்கொள்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது.

2. AHRP யின் ஒத்துழைப்புடன் மனித வள விருதுகள் நடாத்தப்பட்டது. 2017ம் ஆண்டு AHRP நிகழ்ச்சித்திட்டத்தை நிறைவு செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டள்ளதுடன், அதில் தனியார் துறைக்கு உரிய வழங்கள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளது. அரச துறைக்கான விருது வழங்கல்களை இவ்வருத்தின் இறுதிக் காலண்டில் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

## <u>4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்</u>

(அ) வருடத்தினுள் நடாத்த வேண்டிய கூட்டங்களின் எண்ணிக்கை தொடர்பாக சட்டத்தில் குறிப்பாக குறிப்பிடப்படவில்லை. 2016ம் ஆண்டுக்காக முதலாவது கூட்டத்தில் Human Capital Learning conference Managerial competency Development Program – 2016 எனும் கருத்திட்டம் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது. ஏனைய இரு கூட்டங்களின் போது கருத்திட்டத்தின் முன்னேற்றம் மூலம் சமர்ப்பிக்கப்பட்டு கலந்துரையாடப்பட்டது. அந்தக் கருத்திட்டங்கள் நிறுவனத்தின் பிரதான நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அது தொடர்பாக கூட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஆ) நிலையான சொத்துக்கள் ஏட்டில் காணப்படும் ரூபா 354,332 பெறுமதியான 26 பண்டங்கள் தொடர்பாக 03.08.2016ம் திகதிய கடிதம் மூலம் தொடர்புடைய அமைச்சிடமிருந்து உரிய ஆலோசனைகள் பெறப்பட்டு அந்த பண்டங்களை அகற்றுவது தொடாபாக நி.பி 104 படி புதிய ஆய்வுக் குழுவொன்று 23.05.2017ம் திகதி நியமிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையை விரைவாகப் பெற்றுத்தருமாறு உரிய அலுவலர்களுக்கு அறிவித்து அந்தப் பணிகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## 4.3 உரிய முறையில் சாட்டப்படாத சொத்துக்கள் கருத்திட்டத்தை ஆரம்பித்தல்

எனது இலக்கம் மற்றும் 30.10.2015ம் திகதிக் கடிதத்தின் மூலம் தொடர்புடைய அமைச்சின் செயலாளரின் ஊடாக திறன் அபிவிருத்தி மற்றும் தொழில் பயிற்சி அமைச்சின் அலுவலக வளாகத்தை மீளத் தயார்செய்வதற்கு அனுமதி கோரப்பட்டுள்ளதுடன் அனுமதி கிடைத்துள்ளது.

அந்த பண்டங்களை மிளப் பயன்படுத்துவதற்கு முடியாததுடன் அதற்கு பெறுமதியை மதிப்பீடு செய்ய முடியாததனால் இந்த கழிவுப் பண்டங்கள் சேர்வதனால் புனரமைத்தல் பணிகள் கடினமாகையினால் அலுவலக வளாகத்தை மீளத் தயார்செய்வதற்கான ஒப்பநதத்திற்க அமைவாக இந்தப் பண்டங்கள் (Gypsum Board, Carpet, Network & Power Cable, Aluminum Bar) ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டுள்ளது. பயன்படுத்தக்கூடிய பெறுமதியுடைய பண்டங்கள் அமைச்சின் அனுமதியுடன் அரச நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

### 4.4 <u>அலுவலகப் பணியாளர்களின் நிர்வாகம்</u>

தற்போது உதவிப் பணிப்பாளர் (நிதி) மற்றும் சாரதிக்கான வெற்றிடம் உள்ளதுடன், ஏனைய வெற்றிடங்களை பூர்த்திசெய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மனித வள அபிவிருத்தி சபை சட்டத்தை திருத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன், வருங்காலங்களில் ஏற்படும் மாற்றங்கள் காரணமாக புதிய நியமனங்கள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

## 5. கணக்கு நடவடிக்கைகளின் பயன்படுத்தல் மற்றும் நல்லாட்சி

### 5.1 உள்ளக கணக்காய்வு

இலக்கம் MNPEA/AD/GEN/NHRDC/06 மற்றும் 05.12.2015ம் திகதி கடிதம் மூலம் அமைச்சின் உள்ளக கணக்காய்வாளரிக் பெயர் குறிப்பிடப்பட்டு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

கே.ஏ.லலிததீர
பணிப்பாளர்
தலைவருக்காக